Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆவணி 04 | 20-08-94 | சனிக்கிழமை | ஓசை 183

## புகைப் பிடிப்போருக்கு அருகில் இருப்போருக்கும் புற்றுநோய்

புகைப் பிடிக்கும் பழக்கம் அற்றவர்கள் கூட புகைபிடிப்பவர்களின் அருகில் இருக்கும் போது பாதிக்கப்படுகின்றார்கள்- அமெரிக்காவில் நடாத்தப்பட்ட ஆய்வு ஒன்றில் இதுவரை புகைபிடிக்கும் பழக்கம் அற்ற 47ஆயிரம் பேர் மார்பு புற்றுநோய்க்கு ஆளாகியுள்ளனர்- இதே வேளையில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேர் மாரடைப்பு நோய்க்கு ஆளாகியுள்ளனர்- இதனால் தற்சமயம் பொது இடங்களில் புகைபிடிப்பது தடைசெய்யப்பட்டு வருகின்றது.

# புலிகளே தமிழரின் முக்கிய பிரதிநிதிகள்

# பேச்சிற்கு அழைப்பதற்கு அதுவே காரணம்

## புதிய பிரதம மந்திரி சந்திரிகா

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் முக்கியமான பிரதிநிதிகள். எனவே தான் நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு இணைந்து செயலாற்ற முன் வருமாறு விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுக்கிறேன் என புதிய பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்துள்ளார்.

மேலும் விடுதலைப் புலிகள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற செய்தியாளர் மகாநாட்டில் பிரதமர் உரையாற்றுகையில், இனவாதத்திற்கு இந்த நாட்டில் இனிமேல் இடமில்லை என்பதை கடந்த 16-ம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தல்மூலம் பெரும்பான்மையான சிங்கள மக்கள் நிரூபித்துள்ளனர். பலதரப்பட்ட சவால்கள் எங்களை எதிர்நோக்கியுள்ளன- இந்த சவால்கள் அனைத்தையும் வெற்றி கொள்வதற்கு இன்றிலிருந்து திடசங்கற்பத்துடன் பணியாற்ற ஆரம்பிக்க இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்-

எதிர்காலத்தில் ஆயுதப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவிடம் 3 முக்கிய அமைச்சு பொறுப்புக்கள்

(கொழும்பு)

பிரதமராகப் பதவியேற்றுள்ள திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்க நிதி, திட்டமிடல் மற்றும் இனவிவகாரங்களுக்கான தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு என்பவற்றையும் தமது பொறுப்பிலேயே வைத்துக் கொண்டுள்ளார். குறிப்பாக தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சை அவர் தமது பொறுப்பில் வைத்திருப்பது இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதி டி.பியிடம்

(கொழும்பு)

சிறிலங்காஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா பௌத்த சாதன அமைச்சையும் பாதுகாப்பு அமைச்சையும் தொடர்ந்தும் தம் வசமே வைத்துக்கொண்டுள்ளார் முந்திய அமைச்சரவையில் பாதுகாப்பு; நிதி; பௌத்த சாசனம்; கல்வி, உயர்கல்வி, உள்நாட்டு அலுவல்கள் என்பன போன்ற அமைச்சுப் பொறுப்புக்கள் ஜனாதிபதியிடமே இருந்தது தெரிந்ததே.

## சபாநாயகர் பதவி நீலனுக்கு கிடைக்கலாம்

சிறிலங்காவின் 10-வது பாராளுமன்றத்தின் புதிய சபாநாயகராக தமிழர் விடுதலைக் கூட்டணி தேசிய பட்... கப்படலாம்என பிரதி அமைச்சர்களும் பொதுஜன ஐக்கிய முன்னணியால்வி ரைவில் நிய...

## படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## ஊரடங்கு

(கொழும்பு)

கொழும்பில் நேற்று மாலை 6-00 மணிக்கு மீண்டும் ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. இன்று காலை 5 00 மணி வரை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய பிரதமரின் யோசனையை புலிகள் இயக்கம் வரவேற்கிறது

### லண்டன் கிளையை சேர்ந்த அன்ரன்ராஜா

(கொழும்பு)

சிறிலங்காவில் அமைக்கப்பட்டுள்ள புதிய அரசாங்கத்துடன் நிபந்தனையற்ற வகையில் பேச்சுக்கள் நடத்தப்படுவதற்கு ஆயத்தமாக இருப்... புதிய பிரதமர் சந்திரிகா விடுத்த அழைப்பு குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அன்ரன் ராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் இது குறித்து

மேலும் கருத்துத் தெரிவிக்கையில் விடுதலைப் புலிகளைப் பொறுத்த மட்டில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய அமைச்சர்களாக பதவி ஏற்றோர் விபரம்

- ★ ஜனாதிபதி விஜேதுங்க - பாதுகாப்பு, பௌத்த சாசனம்
- ★ பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க - நிதி, திட்டமிடல் இனவிவகார தேசிய ஒருங்கிணைப்பு.
- ★ சிறிமாவோ பண்டாரநாயக்கா - இலாகா ஏதுமற்ற அமைச்சர்.
- ★ கேணல் அநுருத்த ரத்வத்த - நீர்ப்பாசன, மின்சக்தி எரிபொருள் அமைச்சர், பாதுகாப்பு பிரதி அமைச்சர்.
- ★ தர்மசிறி சேனநாயக்கா - தகவல் சுற்றுலா விமானப் போக்குவரத்து

(6 ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

சிறிலங்காஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா பௌத்த சாதன அமைச்சையும் பாதுகாப்பு அமைச்சையும் தொடர்ந்தும் தம் வசமே வைத்துக்கொண்டுள்ளார் முந்திய அமைச்சரவையில் பாதுகாப்பு; பௌத்த சாசனம்; கல்வி, உயர்கல்வி, உள்நாட்டு அலுவல்கள் என்பன போன்ற அமைச்சுப் பொறுப்புக்கள் ஜனாதிபதியிடமே இருந்தது தெரிந்ததே.

## சபாநாயகர் பதவி நீலனுக்கு கிடைக்கலாம்

சிறிலங்காவின் 10-வது பாராளுமன்றத்தின் புதிய சபாநாயகராக தமிழர் விடுதலைக் கூட்டணி தேசிய பட்டியல் உறுப்பினர் கலாநிதி நீலன் திருச்செல்வம் நியமிக்கப்படலாம்என பிரதி அமைச்சர்களும் பொதுஜன ஐக்கிய முன்னணியால்வி ரைவில் நியமிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வெளிவிவகார அமைச்சராக தமிழர் நியமனம்

சட்டத்துறை வல்லுநரும், சர்வதேச ரீதியில் அறியப்பட்டவருமான லக்ஸ்மன் கதிர்காமர் திருமதி சந்திரிகாவின் அமைச்சரவையில் வெளியுறவு அமைச்சராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். சிறிலங்காவின் வரலாற்றிலேயே வெளிநாட்டு அமைச்சராக தமிழர் ஒருவர் நியமனம் பெற்றிருப்பது இதுவே முதல் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் பட்டியலில் தமிழர்கள் சிலர் போட்டியிட வேண்டும் என்ற ஆலோசனையைத் தொடர்ந்தே இவர் இப்பட்டியலின் கீழ் போட்டியிட முன் வந்தார் எனக் கூறப்படுகிறது.

இதுவரை கட்சிச் சார்பான அரசியலில் ஈடுபடாது இருந்த இவர் இப்போது தான் முதன்முதலில் கட்சியொன்றில் வேட்பாளராக போட்டியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# புதிய பிரதமரின் யோசனையை புலிகள் இயக்கம் வரவேற்கிறது

### லண்டன் கிளையை சேர்ந்த அன்ரன்ராஜா

(கொழும்பு)

சிறிலங்காவில் அமைக்கப்பட்டுள்ள புதிய அரசாங்கத்துடன் நிபந்தனையற்ற வகையில் பேச்சுக்கள் நடத்தப்படுவதற்கு ஆயத்தமாக இருப்பதாக விடுதலைப் புலிகள் அமைப்பின் சார்பில் லண்டன் கிளையைச் சேர்ந்த அன்ரன் ராஜா பி.பி.சி. தொலைக் காட்சிக்கு தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளை பொறுத்தமட்டில் பிரதமர் சந்திரிகாவின் சமாதான அழைப்பை மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றது. பேச்சுவார்த்தைக்கான கதவுகளை விடுதலைப் புலிகள் என்றுமே திறந்து வைத்துள்ளனர் என எமது தலைவர் திட்டவட்டமாக அறிவித்துள்ளார் இவ்வாறு விடுதலைப் புலிகளின் லண்டன் அலுவலகப் பிரதிநிதி அன்டன் ராஜா பிபிசிக்கு தெரிவித்தார்

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண வரும்படி புதிய பிரதமர் சந்திரிகா விடுத்த அழைப்பு குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அன்ரன் ராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் இது குறித்து

மேலும் கருத்துத் தெரிவிக்கையில் விடுதலைப் புலிகளைப் பொறுத்த மட்டில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய அமைச்சர்களாக பதவி ஏற்றோர் விபரம்

- ★ ஜனாதிபதி விஜேதுங்க - பாதுகாப்பு, பௌத்த சாசனம்
- ★ பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க - நிதி, திட்டமிடல் இனவிவகார தேசிய ஒருங்கிணைப்பு.
- ★ சிறிமாவோ பண்டாரநாயக்கா - இலாகா ஏதுமற்ற அமைச்சர்.
- ★ கேணல் அநுருத்த ரத்வத்த - நீர்ப்பாசன, மின்சக்தி எரிபொருள் அமைச்சர், பாதுகாப்பு பிரதி அமைச்சர்.
- ★ தர்மசிறி சேனநாயக்கா - தகவல் சுற்றுலா விமானப் போக்குவரத்து

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பொ.ஐ.மு.அமைச்சரவைபதவிஏற்பு 22 உறுப்பினர்கள் அங்கம் வகிப்பு

### பிரதமராக சந்திரிகா சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கத்தின் புதிய அமைச்சரவை நேற்றுப்பதவிஏற்றது-பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதித்தலைவியான சந்திரிகா குமாரணதுங்கா பிரதமமந்திரியாகப் பதவியேற்றதைத் தொடர்ந்து இருபது அமைச்சர்கள் சத்தியப்பிரமாணமும் இரகசிய காப்புப்பிரமாணமும் செய்துகொண்டனர்- இவ் அமைச்சரவையில், பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற அங்கத்தவர்களும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினரும் அங்கம் வகிக்கின்றனர்-

நேற்று ஜனாதிபதி டி-பி-விஜேதுங்க சம்பிரதாயபூர்வமாக இப்பதவியேற்பு வைபவத்தை நடத்திவைத்தார்- நேற்றுக் காலை 10 10 இல் இருந்து 10.52 வரையும் இவ் வைபவம் இடம்பெற்றது.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா 10.10 மணியளவில் ஜனாதிபதி மாளிகைப்பிரதான வாயிலூடாக மண்டபத்திற்கு வருகை தந்தார். இவருடன் முப்படையைச் சேர்ந்த அதிகாரிகளும் பின்தொடர்ந்தனர். தொடர்ந்து சகல உறுப்பினர்களும் எழுந்து நின்றனர்- திருமதி சிறிமாவோ

(6 ஆம் பக்கம் பார்க்க)





முதலாவது படத்தில் நேற்று நடைபெற்ற பதவிஏற்பு வைபவத்தின்போது சந்திரிகா குமாரணதுங்க ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க விடம் இருந்து பதவிப் பிரமாணப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதையும் இரண்டாவது படத்தில் சத்தியப் பிரமாணம் செய்வதையும் மூன்றாவது படத்தில் பொ.ஐ. முன்னணியின் தலைவியான சிறிமாவோ பண்டாரநாயக்கா அமைச்சராக சத்தியப் பிரமாணம் செய்வதையும் காணலாம்.

படப்பிடிப்பு: மணிவண்ணன்

# வரி விளம்பரம்

### சாரதா

கோமல் சுவாமிநாதன் பேட்டியுடனும் இலங்கை எழுத்தாளர்களின் ஆக்கங்களுடனும் இலங்கைச் சிறப்பிதழாக இப்பொழுது விற்பனையாகிறது; (9098)

### இறைச்சிக்கோழி

புறொயிலர்கள், சேவல்கள், வளர்ப்புக்கு உகந்த சேவல் குஞ்சுகள், 2 மாத, 3 மாத பேட்டுக்குஞ்சுகள் விற்பனையாகிறது. வியாபாரிகளுக்கு விலைக்கழிவு உண்டு. யாழ்ப்பாணவீதி, உரும்பிராய்ச்சந்தி. (9144)

### பாலர் ஆசிரியராக--

பயிற்சிவிரைவில்-க.பொ.த சாதாரணதரம் கடைசித் தகைமை சனி ஞாயிறு நேரில் வர முடியாதோர் தபால் வழியிலும் கற்கலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர் கலைக் கல்லூரி 73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (9133)

### துளிர்

தமிழ் நாடு, புதுவையில் பள்ளி மாணவரிடையே பெரும் வரவேற்பைப் பெற்று பல இலட்சம் பிரதிகள் விற்பனையாகும் சிறுவர்க்கான அறிவியல் மாத இதழ் இப்பொழுது யூன், யூலை இதழ்கள் எங்கும் விற்பனையாகிறது. (90 97)

### SLAS

SLAS பரீட்சைக்குரியநூல்கள் நுண்ணறிவு, கிரகித்தல் விற்பனையாகின்றன. ஆக்கியோன் கலாநிதி க.குணராசா பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும். (9104)

### மிருதங்க வகுப்பு

மிருதங்க வகுப்பு வருகிற புரட்டாதி 3-9-94 அன்றிலிருந்து நடைபெறவிருக்கிறது. சேர விரும்பியோர் தொடர்பு கொள்ளவும். கோவிந்தபிள்ளை விஜயகுமார் 192/1 நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி யாழ்ப்பாணம். (9065)

### சாணை விறாட்டி

---

# பணிநிலை வெற்றிடங்கள்

**கணக்காளர்:-**

அனுபவம்மிக்க பட்டயக் கணக்காளர்.
(குறைந்தது 10 வருட அனுபவமுள்ளவராய் இருத்தல் வேண்டும்)

**கணக்கு எழுதுநர்:-**

க. பொ. த (உ/த)
வர்த்தகப் பிரிவில் கணக்கியல் உட்பட 04 பாடங்களிலும்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்

**எழுதுநர்:-** க.பொ.த. (உ/த)

வர்த்தகப் பிரிவில் 04 பாடங்களில் சித்தி அடைந்து இருத்தல் வேண்டும்.
(தமிழ் தட்டெழுத்து / சுருக்கெழுத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் விரும்பத்தக்கது)

**நிபந்தனைகள்:-**

01. பணிநிலையில் ஆகக்குறைந்தது மூன்றுவருட காலமாவது பணியாற்றுதல் வேண்டும் அல்லது அதற்குமுன் பணிநிலை விலக வேண்டி ஏற்படின் எம்மிடம் பயிற்சி பெற்றிருந்தால் அப் பயிற்சிகால செலவினை செலுத்துதல் வேண்டும்
02. சேவை காலத்திற்கு ஏற்ப உதவுத் தொகை வழங்கப்படும்-

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ 31-08-1994 ம்திகதிக்கு முன் எமக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்**

யாழ். மாவட்டச் செயலகம்,
இருபாலை வீதி,
கோண்டாவில். (சி-10153)

---

# நல்லைக் குமரன் மலர் 1994 விற்பனை

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் சைவசமய விவகாரக்குழுவினால் இவ்வாண்டு வெளியிடப்பட்ட நல்லைக் குமரன் மலர் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் மேற்கு வீதியில் அமைந்திருக்கும் மாநகரசபையின் சுகாதார அலுவலகத்தில் விற்பனையாகின்றது. பிரதி ஒன்றின் விலை ரூபா 50/-

1993ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நல்லைக்குமரன் மலரும் சகாய விலையில் விற்பனை செய்யப்படுகின்றது பிரதி ஒன்றின் தற்போதைய விலை ரூபா 50/-

மேற்படி மலர்களை முருகன் அடியார்கள் ஒவ்வொருவரும் தவறாது பெற்று எமது சேவை தொடர ஒத்துழைப்பு நல்குமாறு வேண்டுகின்றோம்.

சைவசமய விவகாரக்குழு,
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்,

(சி-10142)

---

# பாகிஸ்தான் - இலங்கை கிரிக்கட் போட்டி ரத்து

(கொழும்பு)

இலங்கை அணிக்கும், பாகிஸ்தான் அணிக்கும் இடையில் நடைபெற இருந்த இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலாக, இரண்டு ஒரு நாள் போட்டிகள் நடைபெறும் என இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது. முதலாவது போட்டி 22ந் திகதி எஸ்எஸ்சி மைதானத்திலும், இரண்டாவது போட்டி 24ந் திகதி பிரேமதாச விளையாட்டரங்கிலும் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சுகாதார கண்காட்சி

(கொழும்புத்துறை)

யாழ்.மாநகர சபையின் ஆதரவில் யாழ்பழைய பருத்தித்துறை வீதியில் உள்ள யாழ் மாநகர சபை அலுவலகத்தில் இலவச சுகாதாரக் கண்காட்சி இடம்பெற்று வருகிறது.

இக்கண்காட்சியில் புற்றுநோய் தடுப்பு, சுகாதாரம் சம்பந்தமான பல காட்சிகள் காண்பிக்கப்பட்டு வருகிறது. (24)

## கூட்டுறவு பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

யாழ்- மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் மாவட்ட மட்டத்திலான மகளிர் குழுப் பயிற்சிநெறி இம்மாதம் 27ம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மணிக்கூட்டு வீதியில் உள்ளயாழ்-மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில், மகளிர் குழுத் தலைவி திருமதி கு. சிவராஜா தலைமையில் நடைபெறும் என்றும் சங்கங்கள் தமது மகளிர் குழு உறுப்பினர்கள் மூவரை தவறாது அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப் படுகின்றது (22)

## தேர்

(கொழும்புத்துறை)

தொண்டமனாறு அருள்மிகுஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆயத்தின் தேர்த்திருவிழா இன்று சனிக்கிழமை காலை7. 30 மணிக்கு நடைபெறும்.

## உற்பத்திக் குழுக்கள் புனரமைப்பு

முல்லை மாவட்டத்தில் கிராமிய உற்பத்திக் குழுக்களை முழுவீச்சில் இயங்கவைத்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராம மட்ட செயற்பாடுகளை விரிவுபடுத்தும் நோக்கில் உற்பத்திக்குழுக்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் அண்மையில் நெடுங்கேணி வட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட இப் பணியை மாவட்ட அடங்கிலும் இம்மாத இறுதிக்குள் செய்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## ஆரோக்கிய நாதர் ஆலய திருநாள்

யாழ். குருநகர் கடற்கரை வீதி புனித ஆரோக்கியநாதர் ஆலயத்திருநாள் எதிர்வரும் 22-ம் திகதி பி.ப. 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 27-ம் திகதி காலை 6 மணிக்கு திருநாள் திருப்பலியும், அதனைத் தொடர்ந்து திருநாள் திருச்சொரூப சுற்றுப் பிரகார பவனியும் இடம் பெறும்.

## பிரதேச செயலகம் இடம் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ் - சுபாஸ் ஹோட்டல் விடுதியில் இயங்கி வந்த வேலணை, ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுகளின் அலுவலகங்கள் திங்கட்கிழமை தொடக்கம் மீண்டும் யாழ் - செயலகத்தில், முன்பு இயங்கிய அதே இடத்தில் இயங்கவுள்ளன. (22)

---

**Ist death**

**ANNIVERSARY**

**OF THE LATE**



**MR. CHINNADURAI NAMASIVAYAM**

BORN: 15-12-1933 Called to rest: 30-8 1993

"life is Short
But death is not the end of life
Memories are for ever
You are always alive
In our hearts"

Fondly remembered by
Your Sorrowing Wife,
daughter and Son

"THULASI"
SIVANKOVILADY
CHAVAKACHCHERI

---

# நினைவு கூருகின்றோம்...

**20. 08. 1994.**

1988-ம் ஆண்டு இதேதினத்தில் பளை-இத்தாவில் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

பளை பிரதேசப்பொறுப்பாளரான,

**லெப். சமுத்திரன்** (சண்முகம் சந்திரமோகன் -திருமலை)

1989-ம் ஆண்டு மட்டுநகரில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் கரீம்** (- - -)

1990-ம் ஆண்டு மட்டு - தாந்தாமலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கமால்** (சின்னையா சபாரத்தினம் - கோயில் போரதீவு - மட்டு)

மட்டு - வெல்லாவெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**மைக்கல்ராஜ்** (சின்னத்தம்பி விநாயகமூர்த்தி- கோயில்போரதீவு - மட்டு)

மட்டு - 40-ம் கொலனிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**முகிலன்** (-பத்தன் - திருப்பழுகாமம் - மட்டு)

யாழ்- வசாவிளான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் விழுப்புண்ணடைந்திருந்து வீரச்சாவெய்திய,

**பகவான்** (சின்னத்தம்பி சதீஸ்வரன் - கோண்டாவில் வடக்கு - யாழ்)

**நவம்** (மகாலிங்கம் மோகன் - ஊரெழு கிழக்கு, சுண்ணாகம் - யாழ்)

1991-ம் ஆண்டு ஆனையிறவுச்சமரில் விழுப்புண்ணடைந்து சிகிச்சை பெற்றுவரும்போது வீரச்சாவெய்திய,

வலர் வீதி, பெருமாள் கோவிலடி யாழ்ப்பாணம்' (9065)

---


## சாண விறாட்டி

சமையலுக்கான கணகணப்பான வெப்பம் தரும் சாண விறாட்டிவிற்பனைக்குள்ளது. தொடர்பு:- ''மில்க்வைற்''

(சி-10135)


## சிரமதானப்பணி

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை பணலியம்பதி அருள்மிகு ஸ்ரீ அம்மன் ஐயனார் கோயிலில் இன்று சனிக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் ஆலயபரிபாலன சபையினரால் ஆலயச் சுற்றாடல் பகுதிகள் சிரமதானப்பணி மூலம் செப்பனிடப்பட்டு துப்புரவாக்கப்படவுள்ளது. (24)

---


## விற்பனையாகிறது




இதழ் 3

விலை - 9-50

(சி-10145)


சைவசமய விவகாரக்குழு,
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

(சி-10142)

---

## காரைநகர் சிதம்பராமூர்த்திகோயில்
# ஆவணி ஓண திருவிழா

காரைநகர் சிதம்பராமூர்த்தி கேணியடி கோயில் ஆவணி ஓண திருவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் பேருந்து நிலைய ஞான வைரவர் கோயிலில் 1008 சங்காபிஷேகமும் விசேட பூசையும் 20-8-94 சனிக்கிழமை காலை 7 00 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெற உள்ளன. அத் தருணம் விசேட தவில் வித்துவான்கள் (ஈழத்தின்) பங்கள இசை பொழிவார்கள்.

அத்துடன் சமய சொற்பொழிவும் இடம்பெறும் 1008 சங்காபிஷேக நிகழ்ச்சியை தா. மகாதேவா குருக்கள் தலைமையில் சங்கர நாராயண குருக்கள் நடத்தி வைப்பார் அத்தருணம் ஞான வைரவர் அடியார்களை வந்து இஷ்ட சித்திகளை பெற்று செல்லுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

### விசேட தவில் நாதஸ்வர கச்சேரிகள்

| தவில் | நாதஸ்வரம் |
|---|---|
| K. நித்தியானந்தர் | N.K பத்மநாதன் |
| T. உதயசங்கர் | S. சிதம்பரநாதன் |
| N.R சுதாகரன் | N.K. கணேசன் |
| N.K. வீரர்ச்சாமி | S. சுதந்திரன் |
| N.R. ரவீந்திரன் | N.R சந்தான கிருஷ்ணன் |
| K சிவகுமார் | A. முருகானந்தம் |
| P. ரவி | p. ரஜீவன் |
| A. முருகானந்தம் | A. பகேந்திரன் |
| S. பழனிவேல் | |

''தெய்வீகப் பேருரை''

விடயம்

'ஓணத்தான் உலகாளும் என்பார்களே'

நிகழ்த்துபவர்:- மணிமொழி வாரிசெஞ்சொல்வாணர் அருள் மொழிச் செல்வர்

**க. நாகேஸ்வரன் எப் ஏ.**

பிப ஒரு மணிக்கு அன்னதானம் வழங்கப்படும்

இங்ஙனம்
சி.மு. கேணியடி
காரைநகர்

(9146)

---

''You are always alive
in our hearts''

"THULASI"
SIVANKOVILADY
CHAVAKACHCHERI

Fondly remembered by
Your Sorrowing Wife,
daughter and Son

(9149)

---

நெஞ்சில் நீங்கா . . .

# 1ம் ஆண்டுநினைவலைகள்

மண்ணில்:
24-12-1982

விண்ணில்:
31-08-1993

திதி:
20-8-1994



செல்வன்

## கனகரத்தினம் ஜெயகாந்

சின்னஞ் சிறுமலரே! சிந்தையெல்லாம் அன்பீந்த
வண்ண நடையழகே! வாடியழ வைத்தாயே!
பொன்னாய் உனைக்கருதிக் காத்தோமே போய் விட்டாய்?

மன்னவனே மங்காதுன் பேர்
வெண்ணிலாச் சிரிப்பழகும் - வேதனைகள் தீர்த்து நின்ற
மண்ணிலின்ப ஊற்றாகும் மலர்ப் பதமும்
எண்ணியெண்ணித் துடிக்கின்றோம்,
எம் துரையே உன்னெழிலைக்
கண்ணிலெண்ணிக் கலங்குகிறோம் நாம்!

''ஆத்ம சாந்திக்கு எம் அஞ்சலிகள்''

பொ. கனகரட்ணம்
(கனகு கராஜ்
திருநெல்வேலி)
சங்கத்தானை
சாவகச்சேரி.

அப்பா, அம்மா, லதாஅக்கா,
சுஜாகர் அண்ணா, தங்கை சாலிகா,
பெரியப்பாமார், சித்தப்பா, சித்தி,
மாமா, மாமி, அம்மம்மா, மற்றும்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

(9075)

---

**நவம்** (மகாலிங்கம் மோகன் - ஊரெழு கிழக்கு, சுண்ணாகம் - யாழ்)

1991-ம் ஆண்டு ஆனையிறவுச்சமரில் விழுப்புண்ணடைந்து சிகிச்சை பெற்றுவரும்போது வீரச்சாவெய்திய,

**டிலக்ஸ்** (சின்னையா இராஜேந்திரன் - புதுமுறிப்பு உருத்திரபுரம் - கிளிநொச்சி)

மட்டு - கொடுவாமடுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லூக்காஸ்** (சோ. கருணாகரன் - அக்கரைப்பற்று - அம்பாறை)

**றிச்சாட்** ( - செல்வக்குலச்சந்திரன் - இலுப்பையடிச் சேனை - மட்டு)

1993-ம் ஆண்டு ஆனையிறவுப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட மிதிவெடி விபத்தில் எமைப் பிரிந்த,

**கப்டன் வண்ணன்** (இராசநாயகம் சற்குணநாதன் - காக்கையன்குளம், இரணைஇலுப்பைக்குளம்)

**லெப். தமிழேந்தி - ராஜன்** (ரகுநாதன் விநாயகமூர்த்தி - கொந்தக்காரன்குளம், ஓமந்தை வவுனியா,)

**2-ம் லெப். வள்ளுவன்** (இராமசாமி சண்முகரட்ணம் - முத்தையன்கட்டு, ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)

**2-ம் லெப் - சகாதேவன் - ரவிநாத்.** (ஆறுமுகம் ரங்கராஜ் - அம்பாள்குளம் - மாங்குளம்)

**2-ம் லெப். அருள்வாசன் - முகிலன்** (வேலுப்பிள்ளை செல்வகுமார் - விவேகானந்தநகர் - கிளிநொச்சி)

**தவரஞ்சன்** (பழனியப்பன் செல்வகுமார் - இல;55 கோணாவில் - கிளிநொச்சி)

**2-ம் லெப். விநாயகன்** (வடிவேல் தியாகராசா - சேனைப்புலவு, நெடுங்கேணி - முல்லை)

**2-ம் லெப். வீரமணி** (செல்லத்துரை பார்த்தீபன் - கீரிசுட்டான்சந்தி, நெடுங்கேணி - முல்லைத்தீவு)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும் கடற்பரப்பிலும் இலங்கை - இந்திய படையினராலும், தேசவிரோத சக்திகளினாலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10146)

# ருஷ்யர்களின் இழந்த வளமான வாழ்வை மீட்டுத் தருவதாக வாக்குறுதிகளை அள்ளிவழங்கும் ஒரு தலைவன் வரலாறு

விளாடிமிர்இ லியனோவிச் லெனின் தோன்றியமுன்னைய சோவியத் அரசியல் அரங்கிலோ இப்போதுவிளாடிமார்சிரினோவ்ஸ்க்கி (Vladimir Zhirinovsky) என்கிற அரசியல் தலைவர் தோற்றம்பெறுவது வரலாற்று கட்டத்தின் பிரதிபலிப்பாக மட்டுமல்லாமல் ஒரு வரலாற்றுப் பிறழ்வாகியும் விட்டது. யாரிந்த விளாடிமிர். சிரினோவ்ஸ்க்கி என்கிற கேள்விஇப்போதுஎங்கும் எழும்புகின்றது 1990-ம் ஆண்டின் முன் இவர் பற்றி எவருமே கேள்விப்பட்டிருக்கவில்லை கேள்விப்படுவது போல் அவரது வரலாறும் இருக்கவில்லை. ஆனால் சென்ற வருடம் டிசம்பர் மாதம் 12 ம் திகதி நடைபெற்ற டூமா எனப்படும் ருஷ்ய நாடாளுமன்றத் தேர்தலிலே இவரும் இவரது கட்சியான LDP எனப்படும் தாராண்மைவாத சனநாயகக் கட்சியும் பெரு வெற்றி பெற்றபோது எல்லோருமே அதிர்ச்சியுற்றனர். ருஷ்ய அரசியல் அரங்கிலே இவரது புது வரவு பெரும் குழப்பத்தை மட்டுமல்ல ஒரு பெரும் அபாயத்தின் தோற்றுவாயாகவும்மேற்குலகால் கருதப்படுகின்றது. 1996-ம் ஆண்டு நடைபெறவிருக்கும் சனாதிபதிக்கான தேர்தலிலே எப்படியேனும் யெல்ட்சினை வெற்றி பெறச் செய்யவேண்டும் என்ற நோக்கிலே செய்யப்படும் மேற்குலகிற்கு சிரினோவ்ஸ்க்கியின் அரசியல் பிரவேசம் வேப்பங்காயாக கசக்கின்றது. அடுத்த சனாதிபதித் தேர்தலே யெல்ட்சினுக்கு கடும் போட்டியாளாக உருவெடுக்கும் இவர் தப்பித்தவறி வென்று விடுவாரோ என்கிற பயம் மேற்குலகைப்பிடித்து ஆட்டுகிறது.

எனவே இப் போதிருந்தே மேற்குலக தொடர்பு சாதனங்கள் இவரை ஒரு நவீன பாசிஸ்ட், நாசி,கிட்லரின் மறுபிறப்பு, வலதுசாரி போக்குள்ள சருவாதிகாரி எல்லாவற்றுக்கும் மேலாக விளம்பரப் புகழாசை பிடித்த கோமாளி என்றெல்லாம் திட்டித் தீர்க்கின்றனர்.ஆனால் இங்குள்ள வியபபுஎன்னவென்றால்இவை பற்றியெல்லாம் கவலைப்படாதசிரினோவ்ஸ்க்கியோ இதற்குஏற்றால்போலவே நடந்து கொள்கின்றார். அவரது எல்

ற்றப்பட்ட ருஷ்ய மக்களின் நம்பிக்கை நட்சத்திரம் என அவரது ஆதரவாளர்கள் அவரை வருணிக்கும் பாங்கு இவற்றையெல்லாம் அவரை கோமாளியாக காட்ட முயலும் மேற்குலகும் வெறும் வீராப்பு வெட்டிப் பேச்சுக்கள் எனத் தள்ளிவிட தயாராகவில்லை இக்கூச்சல்கட்கு பின்னால் பெருத்த அபாயமொன்று மறைந்திருப்பதாகவே அவர்கள் கருதுவதாக தெரிகின்றது மேற்குலகம் மட்டுமல்ல ருஷ்யதரப்பிலேயும் இவ்வாறே எண்ணப்படுகின்றது சிரினோவ்ஸ்க்கி போன்ற ஒருவர் ருஷ்யாவை பொறுப்பெடுக்கும் அபாயம் உள்ளது சாதாரண மக்கள் மத்தியிலே இவர் நகைப்புக்குரிய ஆளல்ல நம்பிக்கைக்குரிய ஆள் என்கிறார் யெல்ட்சின் ஆதரவு நாடாளுமன்றக் கட்சித்தலைவர் எனவே இப்போது சிரினோவ்ஸ்க்கியின் பின்னணி என்ன? அவரது வரலாறு என்ன? என்பன தேடப்படுகின்றன. மேற்குலக புலனாய்வு துறையினர் இவர் பற்றி கூடுதல் கவனம் செலுத்தத் தொடங்குகின்றனர். இவர் பிறந்த கசாக்கித்தான் பகுதிக்கு இவர்கள் செல்கின்றனர். 'சில விடயங்களில் கிட்லரின் மெயின் காம்பை Mein-Kampf) விட மோசமானது' எனவருணிக்கப்படும் தன்மை பற்றி சிரினோவ்ஸ்க்கி எழுதிய வாழ்க்கை வரலாறு நூல் முற்றிலுமாக உண்மையான தகவல்களை கொண்டது. அல்ல எனக் கருதப்படுவதால் இன்றும் இவர் பற்றிய மருமம் நீடிக்கின்றது. எனவே இப்போது மீண்டும் கேள்வி எழும்புகின்றதுயாரிந்த சிரினோவ்ஸ்க்கி இவர் எவ்வாறு முன்னிலைக்கு வந்தார்? இவர் நோக்கம் என்ன?

தனது பிறப்புப் பற்றியும் இளமை வாழ்வு பற்றியும் இவர் கூறுவதே இன்று பெரும் சர்ச்சைக்குரியதாகிவிட்டது, கசாக்கித்தானின் அல்மாசுட்டா நகரில்தான்பிறந்ததாகவும் தனது இளம் வயதில் பெருத்த வறுமையாலும் ஆதரவு தர எவருமின்றி புறக்கணிப்பாலும் பெருத்த துயரை அடைந்ததாகவும் தனது தந்தை தான் பிறக்க முன்னரே இறந்து விட்டதாகவும் இவர் கூறுகிறார். ஆனால் இவரது வரலாறுபற்றி கசாக்

களை கற்பிக்கும் கல்வி நிலையமொன்றில் பிரதானமாக துருக்கியை பயில்கின்றார். அத்துடன் 5 வருட கல்வியில் ஜேர்மனி, பிரெஞ்சு ஆகிய மொழிகளையும் கற்று தேறிய இவர் துருக்கியில் சோவியத் அலுவலகமொன்றில் மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றுகிறார் இங்கு இன்னொரு விவாதத்திற்குரிய சிக்கலில் சிக்குகிறார். 8 மாதங்கள் இங்கு பணியாற்றிய பின் இவர் துருக்கிய அரசால் நாட்டைவிட்டு வெளியேற்றப்படுகின்றார் தான் சோவியத்தின் பிரசார சின்னங்களை பதக்கங்களை விநியோகித்தால். தன்னை துருக்கி வெளியேற்றியதாக இவர் குறிப்பிடுகின்றார். ஆனால் துருக்கிய அரசோ இவர் ரஷ்ய புலனாய்வுத்துறையான கே.ஜி.பியைச்



சேர்ந்தவர் என்பதால் வெளியேற்றப்பட்டதாக கூறுகின்றது. (இவர் கல்வி கற்ற கல்வி நிலையம் கே ஜி பிக்கு ஆட்களை சேர்க்குமிடம் என இப்போதுஅமெரிக்கா டைம் கூறுகின்றது.) 1969 இவ்வாறாக வெளியேற்றப்பட்ட. இவர் 1972 வரை சோவியத் இராணுவத்தில் பணிபுரிகின்றார். 1972 மொஸ்கோ திரும்பிய இவர் பிரெஞ்சு மொழிபேசும் நாடுகளின் தூதுக் குழுக்களோடு பணிபுரிந்து பின்னர் அரசால் நடத்தப்படும் சட்ட நிறுவனமொன்றில் சேர்கின்றார். இங்கு இவர் கையூட்டு பெற்றதான குற்றமொன்றில் விசாரிக்கப்பட்டு பின் பதவி விலக அனுமதிக்கப்படுகின்றார். இது அவரது முன்னைய வரலாறு.

கும் பணியில் கருத்துரைகள் வழங்குதல், கொள்கைத் திட்டங்களை வகுத்தல் எனபல பணிகளை செய்கின்றார். இவரது உற்சாகமானசெயற்பாடுகளை அவதானித்த தாராண்மைவாத சனநாயக கட்சியை தாபித்த போகச்சேவ் என்பவர் இவரை தன்னோடு இணைத்துக் கொள்கின்றார் சில காலம் மும்முரமாக கட்சிப் பணிகளில் ஈடுபட்ட பின் - இவர் மார்ச் 1990-ம் ஆண்டளவில் ஆட்சியின் பெயரளவுத் தலைவராக நியமிக்கப்படுகின்றார் ஆனால் இங்கும் சிரினோவ்ஸ்க்கி விவாதத்திற்குரியவரானார். தனதுகடுமையான பேச்சுகளினால் கட்சிக்குள்ளே பெரியகுழப்பத்தையே ஏற்படுத்திவிடுகின்றார். கட்சிக் கொள்கைக்கே மாறாகமேலைத்தேய பண்பாட்டினை தாக்கிப்பேசி வெளிநாட்டவரைத் தாக்க வேண்டும். யூதரை ஒழிக்க வேண்டும் என கூச்சல் போட்டு ஆர்ப்பரிக்கவே இவர் கட்சியிலிருந்து வெளியேற்றப்படுகின்றார். ஆனால் இவர் ஏப்ரல் 1991-ம் ஆண்டளவில் தனது புதிய கட்சியை தாராண்மைவாத சனநாயகக் கட்சியென பெயரிட்டு பதிவு செய்து தன்னை வெளியேற்றியமைக்கு பழிக்குப் பழியும் வேண்டினார் அப்பேது மனமுடைந்த நிலையில் போகச் சேவ் கூறிய வார்த்தைகள் இதுதான் ''எனக்கொரு குறைப்பிரசவம் நடந்ததாகவே நான் உணர்கிறேன். ஏனென்றால் சிரினோவ்ஸ்க்கியை பிறப்பித்ததே நானல்லவா ''என்றார்.

பதிவு செய்யமுடிந்தது? என்கிற கேள்விக்கெல்லாம் கே. ஜி. பி உருவாக்கிய - கே. ஜி. பியின் ஆதரவால் வளர்க்கப்படும் அரசியல் வாதி இவர் என்கிற பதிலே இப்போது பல தரப்பாலும் கூறப்படுகின்றது இவற்றினையெல்லாம் மறுக்கும் இவர் எவ்வாறோ 1993டிசெம்பர் தேர்தலில் எல்லாக்கட்சிகளையும் விட கூடுதலாக 24 விழுக்காடுவாக்குகளைப்பெற்றார். யெல்ட்சினின் ஆதரவுக் கட்சி பெற்றதோ 14.7 விழுக்காடு மட்டுமே. மொத்தம் 225 ஆசனங்கள் கொண்ட நாடாளுமன்றில் 64 இடங்களைப் பெற்றார். அவ்வாறு எடுத்த எடுப்பிலே இந்தவெற்றியை அவர் பெற்றார் என்பது மிகச்சுவையான ஒரு தந்திரோபாய அணுகுமுறையொன்றினைநெறிப்படுத்தும் அதே சமயம் ருஷ்ய மக்களின் அவலநிலையை அதிலிருந்து விடுபட துடிக்கும் அவர்களது மனநிலையையும் தெளிவாக காட்டுகின்றது.

என்ன கூறி எவ்விதமாக வாக்குறுதிகளை அள்ளி வீசி இவர் வெற்றிபெற்றார். புகழ்பூத்த புரட்சியொன்றின் மாண்பிற்கு சொந்தக்காரரான மக்கள்தமது உயர்வாழ்க்கைத் தரத்தை இழந்து வறுமை, கொலை, கொள்ளை எனபல 3-ம் உலக நாடுகளைவிட இழிந்த வாழ்க்கை தரத்தை அடைந்ததை எண்ணி சோகத்தால், அவமானத்தால், விரக்தியால் வெட்கித் தலை குனிந்த போது ''தலை நிமிருங்கள் மக்களே புதியஉலகமொன்றை நான் படைத்துக் காட்டுகிறேன்'' என ஓங்கி ஒலித்தவர்சிரினோவ்ஸ்க்கிதான்மக்களின் மனநிலைக்கேற்ப உளவியல் ரீதியாக அவர்களை தேற்றும் அவரது உத்தி எல்லை மீறிய வாக்குறுதிகளாக

யெடுப்பேன். பேலாந்தை மீண்டும் பிரிப்பேன்.'' ''போல்டிக் பகுதி பிரிந்த குடியரசுகளை இணைப்பேன்.'' ''ஜேர்மனிக்கு பாடம் படிப்பிக்க அதன் மேல் அணுவாயுத தாக்குதல் நடத்துவேன்''. என இழந்த வெளியுலக புகழை பெற வழி கூறுகிறார். அது போலவே உள்நாட்டில் உறுதிப்பாட்டை கொண்டுவர ''வெளிநாட்டவர் யாவரையும் நாட்டை விட்டு துரத்துவேன்.'' அமெரிக்கா எதனை செவ்விந்தியர்கட்கு செய்தனரோ ஜேர்மனியினர் எதனை யூதர்களுக்கு செய்தனரோ அதை ருஷ்யாவில் உள்ள சிறுபான்மை இனத்தினர்க்குச் செய்வேன். 300 மில்லியன் மக்கள் நலனுக்காக 1 இலட்சம் பேரை கொன்றால் என்ன?'' எனது ஆட்சி நிச்சயமாக சருவாதிகார ஆட்சியே எனக் கூறி தனது கொள்கைகளை முற்றுப் பெறச் செய்கின்றார். எனவே நொந்து போயிருக்கும் மக்கட்கு என்ன மருந்தை கொடுத்தார். இவர் என்பது தெளிவாகின்றது. அவர் பேசுவது பொய்யும் புளுகுமாக இருந்தாலும் அது ஏன் உண்மையாக கூடாது என்கிற எண்ணம் மக்கள் அடிமனதிலே தோன்றியிருக்கக் கூடும். என்பதே இங்குள்ள செய்தி எனவே சோர்ந்து போய் தளர்ந்திருக்கும் மக்கள் முன்னாலே ஒரு வீரக்கதாநாயகன் போல் சிரினோவ்ஸ்க்கிதோற்றம்கொக்கும்விந்தைஇதுதான்.

ஏனென்றால் ருஷ்ய மக்களின் நிலை இன்று இவ்வாறு தான் இருக்கின்றது. 1990-ம் ஆண்டின் பின் யெல்ட்சின் பொருண்மிய ரீதியாக கொடுக்க முற்பட்ட 'அதிர்ச்சி வைத்தியம்' இன்றுமுதலுக்கே மோசமாகி விட்டது. ஐயாயிரத்துக்கும் (5000) மேற்பட்ட வன்முறை இரகசியக் குழுக்க

## பாலகுமாரன்

வீராப்பு பேச்சுக்களாக கிளர்ந்தன. ''ருஷ்யா எப்படிப்பட்ட நாடு பரந்த தேசம்? அதன்எல்லைகள் எவ்வாறு முன்னர்விரிவடைந்திருந்தன? இன்றைய வீழ்ச்சிக்கு மேற்குலகே குறிப்பாகசி. ஐ. ஏ. யின் சதியே கார

ளின் கையிலே இன்று ருஷ்ய பொருண்மியம் போய்விட்டது. வறுமையின், பட்டினியின் விளிம்பில் ருஷ்ய மக்கள் துவளும் போது திடீரென செல்வந்தரான ஒரு அயோக்கியத்தனம் நிரம்பிய சமூகத்

நிலை ஜேர்மனி, பிரான்சு போன்ற நாடுகளில் வலதுசாரி குழுக்கள் செல்வாக்கு பெறுவதை ஒத்தது. என சில ஆய்வாளர் சிரினோவ்ஸ்க்கி பற்றி குறிப்பிடுகின்றனர். அதே சமயம் மிகக் கவனமாக திட்டமிட்ட முறையில் கே. ஜி. பி. இவரை வளர்த்து வருகின்றது என்கிற கருத்தும் இப்போது முன் வைக்கப்படுகின்றது.

எது எப்படியிருந்த போதும் இன்று விவாதத்திற்குரிய முக்கிய ருஷ்யத் தலைவராகி விட்டார். பலரும் நினைப்பது போல அவர் ஒரு கூத்தாடி அல்ல என்பதை அவர் இடைக்கிடை தனது நுணுகிய கையாளுகையால் வேறு நிரூபித்து வருகின்றார். தனது விசித்திரமான நடவடிக்கைக்கு மிக வன்மையான காரணத்தினை அவர் அண்மையில் தெரிவித்தார். ''எனது தாய் நாட்டின் தற்போதைய மோசமான நிலை இன்னமும் மோசமான இழி நிலையை அடையக் கூடாதுஎன்பதற்காக அதைத் தடுப்பதற்காகவே இவ்வாறு வித்தியாசமாக நடக்கிறேன்'' என்கிறார். தான்ஒருமிதவாதி எனக் குறிப்பிடப்படும் இவர் ருஷ்யாவின் இழிநிலையை ருஷ்ய மக்களின் கவனத்திற்கு கொண்டு வருவதற்காகவே தீவிரமான, காட்டமான பேச்சுக்களை அறிக்கைகளை மேற்கொள்வதாக இவர் குறிப்பிடுகின்றார். இவையெல்லாம் ஒரு தந்திரோபாய அணுகுமுறை எனக் கூறும் அவர் ''அல்லாவிட்டால் நான் ஒரு படித்த புத்திசீவி போல் நடந்தால் எவர் எனக்கு வாக்களிப்பார் என்கிறார். அல்லது ருஷ்ய பொருண்மியம் உறுதியாகவும் மக்களின் வாழ்க்கை பாதுகாப்பாகவும் இருந்ததால் யார்என்னைப் பற்றி சிந்திப்பார்எனயதார்த்தமாகபேசுகிறார் சிரினோவ்ஸ்க்கி

எது எவ்வாறு இருந்த போதும் இன்று ருஷ்யாவில் எந்தவொரு அரசியல் தலைவரும் செய்யாத செய்ய முடியாத வேலையொன்றை இவர் செய்து இருக்கின்றார். அடிக்கடி மக்களை, மக்கள் கூடும்சந்தைகள்வீதிமுனைகள் என எங்கும் சென்று சந்தித்து அவர்களது மனக்குறைகளை கேட்டு அவற்றினை தீர்ப்பதாக ஆரவாரம் செய்து மக்களை உற்சாகப்படுத்துகின்றார். தமது குறைகளைக்

புகழாசை பிடித்த கோமாளி என்றெல்லாம் திட்டித் தீர்க்கின்றனர். ஆனால் இங்குள்ள வியப்புஎன்னவென்றால்இவை பற்றியெல்லாம் கவலைப்படாதசிரினோவ்ஸ்க்கியோ இதற்குஏற்றால்போலவே நடந்து கொள்கின்றார். அவரது எல்லா அரசியல் மரபுகளையும் மீறிய பேச்சுக்கள் கொச்சைத்தனமான குறும்புகள் மிகக் கேவலமாக மேற்குலகை குறிப்பாக அமெரிக்காவை திட்டித்தீர்க்கும் விதம் எவரையும் தூக்கியெறிந்து பேசுவது மட்டுமல்ல எடுத்த எடுப்பிலே கையை நீட்டும் தன்மை தானே அடுத்த சனாதிபதி என்கிற பாங்கில் நடந்து கொள்ளும் முறை எல்லாமே அவர் தொடர்பான மிகப் பரபரப்பான நிலையைதோற்றுவிக்கின்றன மூழ்ந்தாளிட்டு மூலையில் ஒதுக்கியிருக்கும் ருஷ்யாவை மீண்டும் முடிசூடச் செய்வேன் எனஉறுதிபட அவர் கூறுவது அவமானப்பட்டஏமா

தில் பெருத்த வறுமையாலும் ஆதரவு தர எவருமின்றி புறக்கணிப்பாலும் பெருத்த துயரை அடைந்ததாகவும் தனது தந்தை தான் பிறக்க முன்னரே இறந்து விட்டதாகவும் இவர் கூறுகிறார். ஆனால் இவரது வரலாறுபற்றி கசாக்கித்தான் அல்மா சுட்ட நகரம் சென்று விரிவாக ஆராய்ந்த பத்திரிகையாளர்களோ இவர் வசதியான குடும்பத்திலே பிறந்தவர் என்று மட்டுமல்ல இவர் தந்தை ஒரு யூதர் என்று வேறு குறிப்பிடுகின்றனர், இதனை மிக வன்மையாக மறுத்து இப்படிக் கூறுவோர் மீது வழக்குகள் தொடுக்கும் சிரினோவ்ஸ்க்கியோ இது ஒரு மேற்குலகச் சதி என்கிறார். (ருஷ்ய அரசியலில் யூத எதிர்ப்புணர்வு தீவிரமாக இருப்பது தெரிந்ததே) 1964 ஆம் ஆண்டு தனது 18ஆவது வயதில் தனியாக மொஸ்கோ நகரம் வந்த இவர் அங்குள்ள பிரதான கீழைத்தேய மொழி

அரசால் நடத்தப்படும் சட்ட நிறுவனமொன்றில் சேர்கின்றார். இங்கு இவர் கையூட்டு பெற்றதான குற்றமொன்றில் விசாரிக்கப்பட்டு பின் பதவி விலக அனுமதிக்கப்படுகின்றார். இது அவரது முன்னைய வரலாறு.

இவரது புதிய வரலாறு அரசியல் பிரவேசம் இங்கிருந்து தான் ஆரம்பிக்கின்றது. 1987 ஆம் ஆண்டின் பின் மிக்கேல் கோர்பச்சேவின் சனநாயக பரிசோதனை முயற்சிகளின் போதுதான் சிரினோவ்ஸ்க்கி அரசியல் அரங்கில் பிரவேசிக்கின்றார். இரண்டு வருடங்கட்கு தனக்கான அரசியல் பின் தளமொன்றை அமைக்

மனமுடைந்த நிலையில் போகச் சேவ் கூறிய வார்த்தைகள் இதுதான் "எனக்கொரு குறைப்பிரசவம் நடந்ததாகவே நான் உணர்கிறேன். ஏனென்றால் சிரினோவ்ஸ்க்கியை பிறப்பித்ததே நானல்லவா "என்றார்.

இங்கிருந்துதான் சிரினோஸ்கியின் வெற்றிமுகம் தொடங்குகின்றது. அதேசமயம் இவர் ஒரு "கே ஜி. பியின் ஆள்" என்கிற குற்றச்சாட்டும் வலுப்பெறுகின்றது. எவ்வாறு அவர் பொய்யான தகவல்களை அளித்து தனது கட்சியை பதிவு செய்தார்? இவ்வளவு இலகுவாக விரைவாகஎவ்வாறு ஒரு கட்சியை

வீராப்பு பேச்சுக்களாக கிளர்ந்தன. "ருஷ்யா எப்படிப்பட்ட நாடு பரந்த தேசம்? அதன்எல்லைகள் எவ்வாறு முன்னர்விரிவடைந்திருந்தன? இன்றைய வீழ்ச்சிக்கு மேற்குலகே குறிப்பாகசி. ஐ ஏ, யின் சதியே காரணம். அமெரிக்காஇந்த உலகிற்கு செய்தது என்ன? சுவிங்கம்மை மெல்லக் கற்றுக் கொடுத்தது. ஆட்கொல்லி எய்ட்ஸ் நோயை பரப்பியது மட்டும் தானே" என தொடங்கினார் சிரினோவ்ஸ்கி இவ்வாறு தொடங்கி ரஷ்ய எல்லையில் "கனடாவின் அலாஸ்காவரை நீளச்... செய்வேன்" "துருக்கி மீது படை

ளின் கையிலே இன்று ருஷ்ய பொருண்மியம் போய்விட்டது. வறுமையின், பட்டினியின் விளிம்பில் ருஷ்ய மக்கள் துவளும் போது திடீரென செல்வந்தரான ஒரு அயோக்கியத்தனம் நிரம்பிய சமூகத் தொகுதியே இன்று அங்கு கோலோச்சுகின்றது 5 வருடங்கட்கு முன்னிருந்ததை விட 5 வயதால் இன்று ருஷ்யரது சராசரி ஆயுள் காலம் குறைந்து விட்டது என்றால் வேறு என்ன உதாரணம் தேவை? எனவே ருஷ்யாவின் வலதுசாரி போக்குள்ள சருவாதிகாரப் போக்கு தோன்றுவது இயல்பு என்றும் இத்தகைய

அடிக்கடி மக்களை மக்கள் கூடும்சந்தைகள்வீதிமுனைகள் என எங்கும் சென்று சந்தித்து அவர்களது மனக்குறைகளை கேட்டு அவற்றினை தீர்ப்பதாக ஆரவாரம் செய்து மக்களை உற்சாகப்படுத்துகின்றார். தமது குறைகளைக் கேட்கும் ஒரு சுமை தாங்கி கல்லாக இவரை ருஷ்ய மக்கள் இன்று கருதுகின்றார்கள். எனவே பெரும் உலக மாற்றத்திற்கே வித்திடப் போகின்றவர்கள் என நம்பப்பட்ட ஒரு மக்கள் தொகுதியின் மனநிலை இன்று இவ்வாறு தான் இருக்கின்றது என்பதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும்.


ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்

## பதவி வெற்றிடம்

### பதவி: தற்காலிக லிகிதர்

கிளிநொச்சியில் தங்கியிருந்து வாகனப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றக் கூடியவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது. மேற்படி சங்க எல்லைப்பரப்பில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வயது: 23 - 45

கல்வித்தகைமை: க. பொ. த. (சா. தர) 2 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/வர்த்தக எண்கணிதம் / தூயகணிதம், சிங்களம் / தமிழ் பாஷை என்பவற்றினை உள்ளடக்கியதாக 6 பாடங்களில் சித்தி,

சம்பளம்: நேரில் தீர்மானிக்கப்படும்.

மேற்படி பதவிக்கு விண்ணப்பிப்போர் நேர்முகப் பரீட்சைக்காக 24-8-94-ந் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு சங்கத்தலைமைக் காரியாலயத்திற்கு கல்விச்சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கிராமசேவையாளரின் நற்சான்றிதழ், ஏனைய அனுபவச் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளுடன் நேரில் சமுகம் அளிக்கவும்.

முகவரி: பி. எஸ். சேவிஸ் நிலையம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

பொது முகாமையாளர். (சி-10137)


## ஐக்கிய தேசியக் கட்சி புனரமைக்கப்பட வேண்டும்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியைப் புனரமைப்பதன் மூலமே அடுத்த தேர்தலில் வெற்றிபெற முடியும் என சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்,

நேற்று முன்தினம் மாலை அலரிமாளிகையில் பிரதமர் பதவியிருந்து கொண்டு நடத்தியஇறுதிச்செய்தியாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு கூறினார்,

"அவர் தொடர்ந்து கூறுகையில் வெற்றியும் தோல்வியும் ஜனநாயகத்தின் இரு கண்கள் இதனை நான் நன்கு உணர்ந்துள்ளேன்.

"ஐக்கிய தேசியக் கட்சி இதனை தோல்வி என்று கருதாது- ஒரு பின்னடைவு என்றே கருதும்- நாட்டின் நன்மைக்காக பொதுஜன ஐக்கிய முன்னணி கொண்டு வரும் சகல திட்டங்களையும் ஐ.தே.க. ஆதரிக்கும்" என அவர் கூறினார்,

மக்கள் தற்போதையபோக்கைப் பிரதிபலிக்கும் வகையில் பாராளுமன்றம் ஒன்றைத் தெரிவு செய்துள்ளனர் என பதவியிலிருந்து விலகிச் செல்லும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா தெரிவித்தார்-

ஜனநாயக சிந்தனையுடைய சகல பிரஜைகளும் இந்தத் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் புதிய நிர்வாகத்திற்கும் எனது வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்- தேர்தல் பொதுவாக சட்டத்திற்கு அமைவாகவும், அமைதியான முறையிலும் நடைபெற்றது. எதிர்வரும் நாட்களிலும் சகலரும் அமைதியை பேணல் வேண்டும். குழப்பமற்ற முறையில் இந்த தேர்தல் நடைபெற உதவிய சகலருக்கும் எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐக்கிய தேசிய கட்சி இன்னும் ஒரேயொரு தேசியக் கட்சியாக விளங்குகிறது. எமது கட்சியின் கொள்கைகளிலும் இலங்கையின் அரசியல் பொருளாதார சீர்திருத்தங்கள், சமவாய்ப்புகள், இறைமை ஆகியவற்றிலும் பெருந் தொகையான வாக்காளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

ஜனநாயக முறைக்குதேவைப்படும் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு ஐ. தே. கட்சி தயாராகவுள்ளது. இலங்கையின் சமாதானத்திற்கும் சுபீட்சத்திற்கும் தொடர்ந்தும் முயற்சி எடுக்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

## குளங்கள் புனரமைப்பு

விவசாயக் குழுக்கள் ஊடாக யாழ் குடாநாட்டிலுள்ள ஐந்து குளங்களை புனரமைப்பு செய்வதற்குசர்வதேச கெயர் ஸ்தாபனத்தினர் திட்டமிட்டுள்ளனர்.

விவசாயத் தேவைகளையும் நன்னீர் உற்பத்தி போன்ற அத்தியாவசிய தேவைகளை நோக்காக கொண்டு மேற்கொள்ளப்படவுள்ள மேற்படி புனரமைப்புப் பணிக்கென செலவிடப்படவுள்ள தொகையில் 90 ஆயிரம் ரூபாவை கெயர் ஸ்தாபனம் செலவிடவுள்ளது. மிகுதியை பொதுமக்கள் திரட்டும் நிதி மூலம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது

மேற்படி திட்டத்தில் கட்டுடை கீலன்காமம் குளம், வல்லிபுரக்குறிச்சி கிராய்க் குளம், கந்தரோடைக் குளம், செம்மணிக் குளம், புத்தூரில் மீசாலைவயல் குளம் ஆகிய குளங்கள் ஐந்துமே புனரமைக்கப்படவுள்ளன. மேலும் பல சிறிய குளங்களும் இந்த வேலைத் திட்டத்தின் பின்னர் விவசாய உபயோகத்திற்காக புனரமைப்பு செய்யப்படவுள்ளதாக தெரியவருகின்றது. (41)

## நாம் ஆட்சியில் அமர்வது நடைமுறைக்கு ஒவ்வாதது

- ரணில்

(கொழும்பு)

மக்கள் விருப்பம் வேறுவிதமாக இருக்கையில் நாம் தொடர்ந்து ஆட்சியில் நிலைப்பது என்பது நடைமுறைக்கு ஒவ்வாதது என்றும் எனவே எதிர்க்கட்சிகளிடம் ஆட்சி செல்வதே மிகவும் சிறந்த முறை என முன்னாள் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

கடந்த புதன் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற ஐ தே.க. சிரேஷ்ட தலைவர்கள் கூட்டத்தில் இக்கருத்தை அவர் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் சில தீய சக்திகள் மக்கள் விருப்புக்கு எதிராக ஐ.தே.க. செயல்படுவதை விரும்புவதாகவும், எனவே இந்த நிலையினால் நாட்டில் வன்செயல் உச்சநிலை ஒன்று உருவாவதன் மூலம் தனது அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றிக்கொள்ள இவர்கள் விரும்புவதாக ஜனாதிபதிக்கு சுட்டிக் காட்டியுள்ளார்.

## நிரந்தரநியமனம் வழங்கல் ஏற்பாடு

(தொல்புரம்)

இரண்டு ஆண்டிற்கு மேலாக பதில் கடமை புரியும் பதிவாளர்களை நிரந்தரமாக்குவதற்கு பதிவாளர் நாயகம் முடிவு எடுத்துள்ளார் எனத் தெரியவருகிறது.

யாழ் மாவட்டத்தில் பதில் கடமைபுரியும்பதிவாளர்களின் சேவைக்கால ஆண்டினது விபரங்களை யாழ்பதிவாளர் அலுவலகம்கொழும்பிற்கு அனுப்பி உள்ளதாக மேற்படி அலுவலக வட்டாரங்களிலிருந்து அறியவருகிறது. (41)

## தென்னம்பிள்ளை விநியோகம்

சென்ற மாதம் முல்லை மாவட்ட பெரிய சாளம்பன் கிராமத்தில் நடைபெற்ற எழுச்சிப்பாசறை நிகழ்வில் வைத்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் நல்லின தென்னம் பிள்ளைகள் விநியோகிக்கப்பட்டன.

தென்னை உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாக ஒரு குடும்பத்திற்கு இரண்டு தென்னம் பிள்ளைகள் வீதம் இக்கிராம மக்களுக்கு இவை இலவசமாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பொதுமக்கள் குடும்ப அட்டைப் பதிவு;

# கவனத்தில் கொள்ளவேண்டிய நடைமுறை

## 1.புதிய அட்டை பெறுதல்.

(அ) காலதாமதமாகப்- பதிவோராயின்

இதுவரை பதியாமல் இருந்து புதிய குடும்ப அட்டை பதிய வருவோராயின் குடும்ப அட்டை பெறாமைக்கான காரணத்தை விண்ணப்பப் படிவத்தில் பூர்த்தி செய்து உரிய முழுமையான விபரங்களோடு கிராம சேவகரின் உறுதிப்படுத்தலுடன் அந்தந்தப் பகுதிக் குடும்ப அட்டை அலுவலகத்தில் ஒப்படைத்தால் புதிய குடும்ப அட்டை ஏழு நாட்களின் பின் வழங்கப்படும். ஒரு குடும்பம் ஒன்றுக்கு மேற்பட்ட அட்டைகள் வைத்திருக்க முடியாது.

(ஆ) புதிதாக வடபகுதிக் குள்வந்தோராயின்:-

புதிதாக வடபகுதிக்குள் நுழைந்தவர்கள் மூன்று மாதங்களுக்கு மேல் இங்கே தங்கிச் செல்பவர்களாயின், வடபகுதிக்குள் நுழைவோருக்கான அனுமதிச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து, தாம் வசிக்கவுள்ள பகுதிக் கிராம சேவகரின் உறுதிப்படுத்தலுடன் புதிய குடும்ப அட்டைக்கு விண்ணப்பிக்க வேண்டும். இக் குடும்பம் வடபகுதிக்கு வெளியே செல்லும்போது குடும்ப அட்டையைப்பயண அனுமதி வழங்கும் செயலகத்தில் ஒப்படைத்து விட்டுச் செல்ல வேண்டும்.

(இ) வேறு ஒரு குடும்பத் துடன் பதியப்பட்டு இருந்து தற்போது தனியாகப் பதிய விண்ணப்பிப்போர்:-

வேறு ஒரு குடும்பத்துடன் பதியப்பட்டு, தற்போது தனியான பதிவிற்கு விண்ணப்பிப்பவர்களுக்கு அவர்களது முன்னைய பதிவு இருந்த குடும்ப அட்டையை எம்மிடம் அனுப்பி அதில் அப்பெயரினை நீக்கஞ்செய்து பின்னர் புதிய குடும்ப அட்டை வழங்கப்படும். உதாரணமாக மருமகன், பெறாமகன், உறவு முறைக்குரியவர் பெயர் நீக்கப்பட்ட பின் அவர்களின் குடும்பத்தவர்களின் குடும்ப அட்டையில் புதிய பதிவு மேற்கொள்ளப்படும். வெ

மற்றைய பதிவு நீக்கப்பட வேண்டும். பெயர் நீக்க வேண்டி விண்ணப்பிக்கும் போது சான்று அல்லது ஆதாரக் கடிதம் ஆவணமாக எமக்கு விண்ணப்பப் படிவத்துடன் அனுப்ப வேண்டும். அத்துடன் சம்பந்தப்பட்ட குடும்ப அட்டையோ அன்றி அட்டைகளோ அனுப்பப்படல் வேண்டும். வெறுமனே ஒரு பெயர் எக் காரணங் கொண்டும் நீக்கப்பட முடியாது.

(இ) திருமணம் காரணமாக நீக்கம்:-

திருமணம் காரணமாக ஒரு பெயரை நீக்க வேண்டி விண்ணப்பிப்பின் திருமணப் பதிவுச் சான்றிதழுடன் விண்ணப்பத்தையும், நீக்க வேண்டிய பெயரை உடைய குடும்ப அட்டையையும் அனுப்ப வேண்டும்.

வெளிநாடுகளில் திருமணம் முடித்தவர்களில் திருமண அத்தாட்சிப்பத்திர மூலப்பிரதி இல்லாதவர்கள் திருமணப் புகைப்படம் மூலம் உறுதிப்படுத்த வேண்டும். 5 இ) ல் உள்ளவாறு பெயர் நீக்கப்படும்.

## 3.பதிவுகளில் திருத்தம்.

(அ) தற்காலிக முகவரி மாற்றம்:-

குடும்ப அட்டையில் பதியப்பட்ட இடத்தில் இருந்து பின்னர் வேறு ஓர் இடத்தில் வசிப்பவர்களாயின் தற்காலிக முகவரியில் இரண்டாவது வதிவிடத்தைப் பதிய வேண்டும். தொடர்ச்சியாக ஆறு மாதங்களுக்கு மேல் அவ்விடத்தில் வசிப்போராயின் இரண்டாவது நிரந்தர வதிவிடத்திலேயே புதிய அட்டையைப் பதிந்து பெற வேண்டும். இதற்குக் கிராம அலுவலர் உறுதிப்படுத்திய விண்ணப்பப் படிவத்தைப் பழைய குடும்ப அட்டையுடன் இணைத்து விண்ணப்பிக்க வேண்டும்.

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து வசிப்பவர்கள் நிரந்தர

## 4 திருத்தத்துடன் புதிய அட்டை

[அ] குடும்பத் தலைவரின் பெயர் முழுமையாக மாற்றப்பட வேண்டியதாயின்:-

குடும்பத் தலைவரின் பெயர் ஏதேனும் ஒரு காரணத்தால் முழுமையாக மாற்றப்பட வேண்டியதாயின் மாற்றஞ் செய்யப்பட்டு புதிய அட்டை வழங்கப்படும்.

[ஆ] ஆறு மாதங்களுக்கு மேலாக வசித்தஓர் இடத்தில் குடும்ப அட்டையை மாற்றிக்கொள்ள:-

ஆறு மாதங்களுக்கு மேலாக ஓர் இடத்தில் வசித்திருப்பின் அவ் இடத்துக் கிராம சேவகர் பிரிவு இலக்கத்தில் புதிய அட்டை பெற விண்ணப்பிக்க வேண்டும். 3 (அ) இல் கூறப்பட்டவாறு புதிய அட்டை வழங்கப்படும்.

[இ] பெயர், பிறந்த திகதி, அடையாள அட்டை இலக்கம் என்பவற்றில் தற்போதுள்ள விபரங்களைத் திருத்தஞ்செய்தல்:-

பெயர், பிறந்ததிகதி, அடையாள அட்டை இலக்கம் என்பன மாற்றம் செய்யப்பட வேண்டியதாயின் புதிய அட்டை மாற்றத்தின் பின் வழங்கப்படும்.

[ஈ] ஏதேனும் திருத்தத்திற்காக வரும் குடும்ப அட்டை பாவனைக்கு உதவாததாக இருப்பின்:-

திருத்தத்திற்காக வரும் அட்டை தெளிவற்ற எழுத்துக்களுடனோ அன்றி பாவனைக்குதவாத நிலையிலோ இருப்பின் புதிய அட்டை மாற்றீடாக வழங்கப்படும்.

(ஆ) மணமக்களின் ஒருவரின் பெயர் ஏதோ ஒரு காரணத்தால் பதியப் படாதுஇருப்பின்:-

மணமக்களில் ஒருவரின் பெயர் அவரது பெற்றோரினால் பதியப்படாவிட்டால் பதியப்படாத அப்பெயர் பதியப்பட்ட பின்னரே புதிய அட்டைக்கான விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும். 1992-ம் ஆண்டு குடும்ப அட்டை வழங்கப்பட்ட பின்னர் மணமானவர்களிற்கே இந்நடைமுறை பொருந்தும்.

[இ] திருமணம் காரணமாக பெயர் நீக்க மட்டும்:-

திருமணம் காரணமாகப் பெயர் நீக்கமட்டும் விண்ணப்பிப்பவர்கள் அதற்கான திருமணப்பதிவுச் சான்றுடன் விண்ணப்பிக்க வேண்டும். பெயர் நீக்கவேண்டிய குடும்பஅட்டையையும், திருமணப் பதிவுச் சான்றிதழையும் இணைத்து விண்ணப்பப் படிவத்துடன் விண்ணப்பிக்க வேண்டும்.

## 6. பிறப்பு பெயர் சேர்ப்பு:-

[அ] பிறப்புக்களை சேர்த்தல்;-

பிறப்புக்களைப் பதியும் போது பிறப்புச் சான்றிதழோடு விண்ணப்பத்தைக் கிராம சேவகரின் உறுதிப்படுத்தலுடன் அனுப்பி, அட்டையில் பெயரைச் சேர்க்க வேண்டும்.

[ஆ] தத்து எடுத்த குழந்தைகளைச்சேர்த்தல்;-

தத்து எடுத்த குழந்தைகளைப் பதிவதாயின் தத்து எடுத்த சான்றுக்கான ஆவணத்துடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் பெற்றோரின் பெயர் மாற்றம் சம்பந்தமான சான்றையும் இணைத்து விண்ணப்பித்தால் பிள்ளையின் பெயர் முன்னர் பதியப்பட்ட அட்டையில் இருந்துநீக்கப்பட்டு தத்து எடுத்த பெற்றோரின் அட்டையில் பெயர் சேர்க்கப்படும்.

## 8.வெளிமாவட்டப் பதிவு

(அ) தென்தமிழீழத்தைச் சேர்ந்தவர்கள் இங்கு வசிப்பவர்களாயின் வெளிமாவட்டப் பதிவு மேற்கொள்ளப்படும்.

(ஆ) வன்னி பெருநிலப் பரப்பைச் சேர்ந்தவர்கள் குடும்பமாக யாழ் மாவட்டத்தில் ஆறு மாதத்திற்கு மேல் வசித்தவர்களாயின் நிரந்தர முகவரியாக யாழ் மாவட்ட வதிவிடமே பதியப்படும்.

(இ) 1992- 6-ம் மாதத்தில் இருந்து வன்னி பெரு நிலப்பரப்புப் பகுதியில் குடும்ப அட்டை வழங்கப்பட்டுள்ளதால் இக்காலப் பகுதியின் பின் குடும்பமாக வந்தவர்களிடம் அந்த மாவட்டத்திற்குரிய குடும்ப அட்டையோ அன்றிக் கிராம அலுவலரின் கடிதமோகோரப்படும். இவற்றைச் சமர்ப்பித்தால் மட்டுமே யாழ். மாவட்டத்தில் குடும்ப அட்டை வழங்கப்படும் அது யாழ். மாவட்டக் குடும்ப அட்டையாகவே இருக்கும். 6 மாதத்திற்கு மேல் தொடர்ச்சியாக ஓர் இடத்தில் வசித்தால் மட்டுமே அவ்விடத்துக் கிராம சேவகரின் உறுதிப்படுத்தலுடன் மேற்கண்ட நடைமுறைக்கமைய அட்டை வழங்கப்படும்.

(ஈ) தென்தமிழீழத்தைச் சேர்ந்த மக்கள் தாம் தற்போது வசிக்கும் கிராம சேவகரிடத்தில் விண்ணப்பத்தை உறுதி செய்து வெளி மாவட்டக் குடும்ப அட்டையைப்பெற வேண்டும் நிரந்தர முகவரியில் வெளி மாவட்ட வதிவிடத்தைப் பதிந்து, தற்காலிக முகவரியில் தற்போதைய முகவரியைப் பதிய வேண்டும்.

## 9. தனிநபர் அட்டைப் பதிவு

(அ) கிறிஸ்தவ பாதிரிமார்கள், கன்னியாஸ்திரிகளுக்கானது:-

பாதிரிமார்கள், கன்னியாஸ்திரிமார்கள் உத்தியோக பூர்வமான மேலதிகாரியின் கடிதத்துடனும், கிராமசேவகரின் உறுதிப்படுத்தலுடனும் தனிநபர் அட்டைகளைப் பெறலாம். முன்னர் தவறுதலாகக் குடும்ப அட்டை பெற்றவர்கள் அவற்றைச் சமர்ப்பித்துத் தனிநபர் அட்டை பெற்றுக்கொள்ளவேண்டும்

(ஆ) யாழ்.பல்கலைக்கழக வெளி மாவட்ட மாணவர்களுக்கானது:-

யாழ். பல்கலைக்கழகத்தில் பயிலும் வெளி மாவட்ட மாணவர்கள்- அந்தந்தப் பீட மாணவர் ஒன்றிய அத்தாட்சிக் கடிதத்துடனும், கிராமசேவகரின் உறுதிப்படுத்தலுடனும் தனிநபர் அட்டையைப் பதிந்து பெறல் வேண்டும்.

(இ) யாழ். பாடசாலைகளில் பயிலும் வெளி மாவட்டமாணவர்களுக்கானது:-

குடும்பமாக அன்றி தனியாக யாழ். மாவட்டத்தில் பாடசாலைகளில் கல்வி பயிலும் வெளி மாவட்ட மாணவர்கள் தனிநபர் அட்டை பதிதல் வேண்டும். கல்லூரி அதிபரின் சிபார்சுக் கடிதத்துடனும், கிராம சேவகரின் உறுதிப்படுத்தலுடனும் இதைப் பதியலாம்.

ஈ) தொழில் நிமிர்த்தம் தங்கியுள்ள வெளி மாவட்டத் தவராயின்:-

தொழில் நிமிர்த்தம் யாழ். மாவட்டத்தில் தங்கியுள்ள வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அத்தாட்சிக் கடிதத்துடனும், கிராமசேவகரின் உறுதிப்படுத்தலுடனும் விண்ணப்பிக்க வேண்டும். இவர்களுக்கான தனிநபர் அட்டை எமது பரிசீலனையின் பின் வழங்கப்படும். (குடும்பமாக இங்கு தங்கியுள்ளோராயின் இந்நடைமுறை பொருந்தாது).

மேற்குறிப்பிட்ட நடைமுறைகளின்படி குடும்ப அட்டை திருத்தங்கள் செய்வதற்கு விண்ணப்பிக்கலாம் என்பதை போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் குடும்ப அட்டை பகுதியினர் பொது மக்களுக்கு அறியத் தருவதுடன் மேலதிக விபரங்களுக்கு அந்த அந்தப் பகுதிக்கு என இருக்கும் குடும்ப அட்டை செயலகத்துடன் வார நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரையும் பிற்பகல் 1.30 மணி தொடக்கம் 3.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 1.00 மணி வரையும் தொடர்பு கொள்ளலாம் என்பதையும் அறியத் தருகின்றனர்.

# கலந்துரையாடல்

(கொழும்புத்துறை)

யாழ் மாநகரசபை நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள உற்சவ முகாம் சுகாதாரப் பணிமனையில் இன்று 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 11-00 மணிக்கு நல்லூர் ஆலயச் சூழலில் உள்ள உணவகங்கள், தேநீர்ச்சாலைகள், குளிர்பானக்கடைகள் (ஐஸ்பழம்) ஆகியவற்றின் சகல உரிமையாளர்களுக்குமான ஓர் கலந்துரையாடல்கூட்ட நல்லூர் உற்சவமுகாம் பொறுப்பு அதிகாரி திரு. (.)ா. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெறும். (24)

# விவசாய அறிமுக அட்டை வழங்குவதற்கு ஏற்பாடு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் முல்லை மாவட்டத்திலும் விவசாயிகளுக்கான அறிமுக அட்டை வழங்குவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் தற்பொழுது ஒட்டுசுட்டான் வட்டத்தில் காணித்தரவுகள், வரைபடங்களுடன் எடுக்கப்பட்டுள்ளன, விவசாயிகளுக்கு விண்ணப்பப் படிவங்கள் விநியோகிப்பதுடன் அவர்களின் புகைப்படங்கள் எடுப்பதும் துரித கெதியில் நடைபெற்று வருகின்றன.

இவ் வருட பெரும்போக வேலைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் சகல விவசாயிகளுக்கும் விவசாய அறிமுக அட்டைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்கள் குடும்ப அட்டை பதிவு மேற் கொள்ளும்போது கவனத்திற் கொள்ளவேண்

# மிருதங்க அரங்கேற்றம்

அட்டையில் புதிய பதிவு மேற்கொள்ளப்படும். வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்களாயினும், உதவியாளர் எனப்படுவோராயினும் தனிநபர் அட்டை பதிந்து வழங்கப்படும். வயதான தாயார் அல்லது தந்தையார் தமது மணமான பிள்ளைகளுடன் சேர்த்துப் பதிவுவைத்திருக்கமுடியாது

## 2 பெயர் நீக்கம்

(அ) இறப்பு காரணமாக நீக்கம்:-

இறப்புக் காரணமாகப் பெயர் நீக்கக்கோரின் கிராமஅலுவலரின் சிபார்சு அல்லது அத்தாட்சிப் பத்திரம் இணைத்தால் பெயர் எம்மால் நீக்கப்படும். தனி உறுப்பினர் ஒருவரைக்கொண்ட குடும்ப அட்டையில் அவ்வுறுப்பினர் இறப்பாராயின், அவ்வட்டை கிராம அலுவலரினாலோ அல்லது இறந்தவரது உறவினராலோ அக் குடும்ப அட்டையோ அல்லது அவ்வட்டைக்குரிய இலக்கமோ அப்பகுதிக் குடும்ப அட்டைச் செயலகத்தில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

(ஆ) தவறுதலாகப் பதியப்பட்ட ஒரு பெயர் நீக்கம்:-

வேற்றுக் குடும்ப உறுப்பினர் ஒருவரின் பெயர் தவறுதலாக ஒரு குடும்ப அட்டையில் பதியப்பட்டு இருப்பின் அப்பெயர் நீக்கப்படல் வேண்டும். ஒரு குடும்பத்தின் மணமாகாத உறுப்பினர் மட்டுமே ஓர் அட்டையில் பதிய முடியும்.

1(இ) இலே குறிப்பிட்டவாறு நீக்கப்படும் பெயர்களைப் புதிய அட்டையில் பதிந்து கொள்ள முடியும். ஓர் உறுப்பினரின் பெயர் இரு அட்டைகளில் பதியப்பட முடியாது. மிகச் சரியான ஒரு பதிவை விடுத்து

... காரணமாக இடம் பெயர்ந்து வசிப்பவர்கள் நிரந்தர முகவரியாகச் சொந்த முகவரியையும் தற்காலிக முகவரியாகத் தற்போதைய முகவரியையும் பதிய வேண்டும். இடம் மாறும் போது மீளவும் தற்காலிக முகவரியிலேயே பதிவு மாற்றத்தை மேற்கொள்ள வேண்டும். இவர்கள் நிரந்தர முகவரியில் மாற்றம் மேற்கொள்ள வேண்டியதில்லை.

(ஆ) குடும்பத் தலைவரின் பெயர் முழுமையான தாக்கல்:-

குடும்பத் தலைவரின் பெயர் குடும்பப் பதிவு அட்டை முன்பகுதியில் முழுமையானதாக இல்லாவிட்டால் அது முழுமையாக்கப்படல் வேண்டும். தகுந்த சான்றுடன் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து குடும்ப அட்டையை ஒப்படைத்தால் சரியான விபரம் பதியப்பட்ட அட்டை மீள வழங்கப்படும். அட்டையின் பின் பகுதியில் பதியப்படும் பெயர்கள் முழுமையானதாகவும், பூரணமானதாகவும் இருக்க வேண்டும். குடும்பப் பெயர் உள்ளவர்கள் அதனையும் இணைக்க வேண்டும்.

(இ) தொழில், இடம் என்பன புதிதாக சேர்த்தல்:-

இதுவரை குடும்ப அட்டையில் தொழில், தொழில்-இடம், என்பன பதியப்படாவிட்டால் பதிவுத் திருத்தத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். வடபகுதிக்கு வெளியேயும், வெளிநாடுகளிலும் வசிப்பவர்கள், வேலை செய்பவர்களும் குடும்ப அட்டையில் அதை வெளிப்படுத்தியிருக்க வேண்டும்.

பொதுமக்கள் குடும்ப அட்டை பதிவு மேற்கொள்ளும்போது கவனத்திற் கொள்ளவேண்டிய குடும்பப் பதிவு சம்பந்தமான நடைமுறைகள் குறித்து போக்குவரத்து கண்காணிப்பு பிரிவின் குடும்ப அட்டைப் பகுதியினர் விடுத்துள்ள அறிவித்தல் இங்கே தரப்படுகின்றது,

[உ] அளவற்ற திருத்தங்கள் அட்டையில் இருக்குமாயின்:-

ஏற்கனவே பல திருத்தங்களுக்கு உள்ளான அட்டை மீளவும், திருத்தத்திற்கு எம்மிடம் வரின் புதிய அட்டை மாற்றத்தின் பின் வழங்கப்படும். புதிய அட்டை பதியப்படும் போது வயதுக்கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவர்களினதும், சிறுவர்களினதும் பதிவிற்கு வயதை அல்லது பிறப்புத் திகதியை உறுதிப்படுத்துவதற்குப் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பாடசாலை அதிபரின், வயதை உறுதிப்படுத்தும் கடிதம், ஆவணங்கள் ஏதும் இல்லாத போது ஏற்றுக் கொள்ளப்படும்.

## 5. திருமணம்/ புதிய பதிவு

(அ) மணமக்கள் இருவரின் பெயரும் குடும்ப அட்டையில் பதியப்பட்டிருப்பின்:-

மணமகனின் பெயரும், மணமகளின் பெயரும் இருசாராரின் குடும்ப அட்டையில் இருப்பின் இரு பகுதிக் குடும்ப அட்டைகளுடன் திருமண அத்தாட்சிப் பத்திரமும் விண்ணப்ப படிவத்துடன் இணைத்து புதிய அட்டைக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

## 7- பிரதி அட்டை

[அ] தவறவிடப்பட்ட அட்டைகளைப்புதிதாகப் பெறல்:-

ஏற்கனவே குடும்பப்பதிவு அட்டை பெற்று அவ் அட்டையினைத் தவறவிட்டவர்கள் அக் குடும்ப அட்டைக்குரிய இலக்கத்துடன் கிராம சேவையாளரின் உறுதிப்படுத்தல் கடிதத்துடனும் குடும்பஅட்டைதவறவிடப்பட்ட காரணத்தையும்முன்புதவறவிடப்பட்டகுடும்ப அட்டையில் நீக்கப்படாத பயண அனுமதி விபரம்பிணைவிடரங்கள் இருந்தால் அவ்விபரத்துடன் குடும்பத் தலைவரினால் எழுதப்பட்ட கடிதத்தினையும் இணைத்து விண்ணப்பித்தால் முன்பு தவறவிடப்பட்டகுடும்பஅட்டையில்உள்ள விபரங்களுடன்எம்மால் பிரதி அட்டை வழங்கப்படும் வழங்கப்பட்ட பிரதிஅட்டையில்தற்போது ஏதேனும் மாற்றம் இருப்பின் பின்பு இப் பிரதி அட்டையுடன் திருத்திப் புதிய அட்டைக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

(ஆ) சேதமடைந்த அட்டைகளை வைத்திருப்பவர்களும், பயண அனுமதி, பிணை விபரங்கள் எழுதி முடிவடைந்தகுடும்ப அட்டை வைத்திருப்பவர்களும் அவ் அட்டைகளுடன் விண்ணப்பித்தால்பிரதி அட்டைவழங்கப்படும்.


# மிருதங்க அரங்கேற்றம்



## செல்வன் திலகராஜா சகுந்தர்

க. இராசதுரை (மிருதங்க ஆசிரியர்)
அவர்களின் மாணவன்

இடம்:- மல்லாகம், பழம்பதி, விநாயகர்.
காலம்:- 20-8-94 சனிக்கிழமை இரவு 8மணி

## இசை அரங்கு

சங்கீத வித்துவான் திரு. M ஸ்ரீரங்கநாதன்அவர்கள் - பாட்டு
வயலின் வித்துவான் இசைஞான பூபதி
திரு R. S. கேசவமூர்த்தி அவர்கள் - வயலின்
செல்வன் தி. சகுந்தர் " " - மிருதங்கம்
செல்வன் M. கஜன் " " - கடம்
வித்துவான் திரு. S. ராஜா " " - மோசிங்
வித்துவான்செல்வன் K. முருகையா " " - தபேலா

பெரியோர்கள், கலைஞர்கள், அன்பர்கள், உறவினர்கள் அனைவரும் வருகைதந்து, மிருதங்க அரங்கேற்றத்தைச் சிறப்பித்து வாழ்த்தும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மல்லாகம்,

இவ்வண்ணம்
மு. திலகராஜா, தி. பூமணி,
M. சேகர், M. முத்துத்துரை
(குடும்பத்தினர்)

(9147)

## சிந்தனைக்கு..

ஆலோசனைகளை அள்ளி வீசிவிட்டு; சொன்னதன் விளைவுகளிலிருந்து பின்னர் தப்புவது மிக எளிதாகி விடாது,

- ஜவாஹர்லால் நேரு

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 20-08-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024

தபால் பெட்டி எண்- 05

# சந்திரிகா முன்னுள்ள பெரும் தடைகள்

பொதுவாக எதிர்பார்க்கப்பட்டதற்கு மாறாக 17 வருடங்களின் பின் சிறிலங்காவில் அரசாங்க மாற்றம் ஓரளவு அமைதியான முறையில் இடம்பெற்றுள்ளது. சந்திரிகா குமாரணதுங்கா பிரதமராகவும், பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் 21 பேர் அமைச்சர்களாகவும் பதவி ஏற்புடன் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்க கட்சி என்ற ஸ்தானத்தை இழந்தது.

அரசியல் விமர்சகர்களால் எதிர்வுகூறப்பட்டதற்கு ஓரளவு மாறாகவே ஆட்சி மாற்றம் அமைதியான முறையில் இடம்பெற்றுள்ளதாயினும், ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா உட்பட சிரேஷ்ட அமைச்சர்கள் பலர் முனையாமலும் இல்லை. ஆனால் எதிர்பார்த்த ஒத்துழைப்பு சிறிய கட்சிகளிடம் இடைக்காமையும், பிரதமமந்திரி ரணில் ஆட்சி மாற்றத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என வற்புறுத்தியதைத் தொடர்ந்துமே ஆட்சி மாற்றம் ஏற்பட்டதெனலாம்.

டி. பி. விஜேதுங்கா தமது முயற்சிகள் பயனளிக்காது என்ற நிலையில் ஆட்சி மாற்றத்திற்கு நெருக்கடிகள் எதையும் தோற்றுவிக்காதமை, அவர் தோல்வியை ஏற்றுக் கொண்டதையும், தனது நிலைப்பாடு மாற்றாது விட்டால் ஏற்படக்கூடிய நெருக்கடிகளையும் அவர் புரிந்து கொண்டுள்ளமையையும் உணர்த்துவதாகவே உள்ளது எனலாம்.

இதேசமயம், பிரதம மந்திரி சந்திரிகா குமாரணதுங்காவிற்கான முட்டுக்கட்டைகள் இத்துடன் நீங்கிவிட்டதாக இல்லை. ஒருவகையில் இப்பொழுதுதான் பெரும் சுமையுடன் பிரச்சினைகளுக்குள் அவர் நுழைகின்றார் என்றும் கூறலாம்.

225 ஆசனங்களைக் கொண்ட பாராளுமன்றத்தில், தற்பொழுது சந்திரிகா தரப்பில் 113 பேர் மட்டுமே உள்ளனர். தமிழர் விடுதலைக் கூட்டணியும், ஜனநாயக மக்கள் ஐக்கிய முன்னணியும் - புளொட் - பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கு ஆதரவு அளிப்பதாக உறுதி அளித்திருப்பினும் அவை அரசாங்கத்தில்

# ஐ. தே. க. சிறு கட்சிகள் ஆதரவைப்பெற பெருமுயற்சி செய்து தோற்றது

இன்னும் சில மணி நேரங்களில் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கா இலங்கையின் புதிய பிரதமராகப் பதவி ஏற்கவுள்ளார். இதன் மூலம் இலங்கையில் பல மாற்றங்கள் நிகழலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பதினேழு வருடங்களாக நீடித்து வந்த ஐ.தே.க ஆட்சி அகற்றப்பட்டு புதிய மாற்றமொன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்றே அவர் தமது தேர்தல் பரப்புரைகளின் போது குறிப்பிட்டு வந்தார். இதற்கு மக்கள் ஆதரவளித்து உள்ளனர்.

1989ஆம் ஆண்டு முதல் விகிதாசார பிரதிநிதித்துவ முறை கடைப்பிடிக்கப்பட்டு வருவது பொதுமக்கள் ஐக்கிய முன்னணி- முஸ்லிம் காங்கிரஸ் கூட்டணி பெருமளவு வாக்குகளைக் குவித்துள்ள போதும், ஆசனங்கள் பெறுவதைக் கட்டுப்படுத்தியுள்ளது. மற்ற முக்கிய கட்சியான ஐ தே க. 94 ஆசனங்களை 225 ஆசனங்களைக் கொண்ட இப் பாராளுமன்றத்தில் பெற்றுக் கொண்டிருக்கிறது. தற்போதுள்ள ஜனாதிபதியை திருப்திப்படுத்தும் வகையில் சிறு கட்சிகளின் ஆதரவைப் பெற்றுவிட ஐ தே. கட்சி பெரும் முயற்சி எடுத்ததாக தகவல்கள் கூறுகின்றன. எனினும் இத்தகைய முயற்சிகள் பின்னர் கைவிடப்பட்டு 49 வயதான தென்னாசியவின் புதிய தலைவர்களில் ஒருவரான திருமதி சந்திரிகா குமாரணதுங்கா பதவி ஏற்பதற்கு வழிவிடப்பட்டது.

திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கா அதிகாரத்திற்கு புதியவர் அல்ல. அவரது தந்தையான எஸ் டபிள்யூ ஆர் டி- பண்டாரநாயக்கா தான் சுதந்திரக் கட்சியின் நிறுவுனர் என்பதும், 1956 - 1957 வரை பிரதமராகப் பதவி வகித்தவர். தாயாரான திருமதி. சிறிமாவும் இலங்கையில் இரு தடவைகளில் பிரதமராகப் பதவி வகித்துள்ளார். இந்தப் பின்னணி பிரதமராகப் பதவியேற்றுள்ள திருமதி சந்திரிகாவின் செயற்பாட்டை மெருகூட்டும் எனலாம். எனினும் இவரது ஆட்சி பலத்த சங்கடங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதும் இங்கு குறிப்பிடவேண்டியதே.

அறுதிப் பெரும்பான்மையை பெற்றுக் கொள்ளாத நிலையில் ஆட்சியை அமைத்துள்ள இவர், தொடர்ந்தும் மிகக் கவனமாகவே செயற்பட வேண்டிய நிலை இருக்கின்றது என்பது ஒரு புறம், சிறு கட்சிகளின் நியாயமான வேண்டுகோள்களை நிறைவேற்ற வேண்டும் என்பது இன்னுமொரு புறம்: மிகப் பெரும்பான்மையான எதிர்பார்ப்புக்களுடன் இவரைத் தெரிவு செய்துள்ள சிறிலங்காவின் சாதாரண குடிமக்களைத் திருப்தி செய்ய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டியிருப்பது மற்றுமொரு புறம். மேலும் இவரது கட்சியை எதிர்க்கும் ஐ தே க. விடம் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிப் பதவி அரசியலமைப்பின் அடிப்படையில் இருப்பதும் இவர் எதிர்நோக்கும் ஒரு சங்கடமேயாகும்.

> சந்திரிகா குமாரணதுங்கா பதவி ஏற்பதற்கு முன்னதாக நேற்றுக் காலை இந்திய வானொலி சிறிலங்காவில் இடம் பெற்ற ஆட்சி மாற்றம் குறித்து ஒலிபரப்பிய செய்தி விமர்சனம்.

சிறிலங்காவின் அரசியலமைப்பின்படி ஜனாதிபதியே அமைச்சரவைக்கு தலைமை தாங்குபவர் என்பதுடன் விரும்பினால் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அமைச்சுப் பொறுப்புக்களை தம் வசம் வைத்திருக்கவும் முடியும். இது கொள்கைகளை வகுப்பதிலும் அமுல்படுத்துவதிலும் திருமதி சந்திரிகாவிற்கு தர்மசங்கடமான நிலைமைகளைத் தோற்றுவிக்கலாம். இவர் பிரான்சின் அரசியல் யாப்பை அடிப்படையாகக் கொண்ட சிறிலங்காவின் அரசியல் யாப்பை மாற்ற முயற்சிப்பாரா என்பதும், பிரான்சிலேயே இவர் அரசியல் விஞ்ஞானத்துறையில் பட்டம்பெற்றவர் என்பதும் இங்கு கவனிக்க வேண்டிய ஒன்றே.

இனி இவருக்கு இருக்கக் கூடிய அனுகூலமான அம்சங்களைப் பார்த்தால், இவர் மாற்றத்தை விரும்புபவர்களின் பிரதிநிதி இவர் பத்துப் பதினைந்து வயதுகளில் தற்போது இருப்பவர்களையும், 50களைக் கடந்துவிட்ட தந்தையர்களையும் கண்ட அனுபவமும், இவர்களைச் சமாளிக்கும் தன்மையும் பெற்றுள்ளார்.

# தேசிய பட்டியலின் மூலம் எம்.பி.க்கள் ஆனோர் விபரம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேசியப்பட்டியலில் இருந்து திருமதி சிறிமாவோ ஆர். டி. பண்டாரநாயக்க, தர்மசிறி சேனநாயக்க, கே பி. இரத்நாயக்க, ஜி எல் பீரிஸ், எஸ். அலவி மௌலானா, லக்ஸ்மன் கதிர்காமர். கே பி. சில்வா, பட்டி வீரக்கோன், ஏ. ஆர் எம். ஹக்கிம், கோசல குணசேகர, ரவீந்திர கருணாநாயக்க, வை பி டி. சில்வா, விஸ்வ வர்ணபலா, ஆகியோரும், ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து காமினி, சந்திர விஜயசேகரா அனுரா பண்டாரநாயக்க, கே. என். சொக்ஸி, சௌ. தொண்டமான், ஆரிய பண்டார றெக்காவ ஜெயமகா, முதலிகே ஹென்றி விக்கிரம ஜெயமகா, சேனாதிர, டொன் கனிஸ்டஸ், ஜயலத் ஜெயவர்த்தனா, ஹரிச்சந்திர சேனாரத்னா, திசாநாயக்க வர்ண குருலாகே அமரபத்த திசாநாயக்க, சரத் விக்கிரமசிங்க குணசேகர, ஆசீர்வாதம் மாசிலாமணி, டானியல் ராஜன், அப்துல் ஹமீட், பிரேமச்சந்திரா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# யாழ் மாவட்டவேட்பாளர் ஒருவாக்கு மட்டும் பெற்றார்

(கொழும்பு)

இலங்கையில் இதுவரையில் நடைபெற்ற தேர்தல்களில் ஆகக் குறைந்த விருப்புகளைப் பெற்றவர் நீக்கிலஸ் மரிசலின் ஆவார். யாழ் மாவட்டத்தில் சுயேட்சைக் குழு, வேட்பாளராக போட்டியிட்ட இவருக்கு ஒரேஒரு வாக்கு மட்டுமே கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

ஆகக் குறைந்த வாக்குகளுடன் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர் எம் ஏ. சபூர் சபருல்லா ஆவார். இவரும் யாழ் மாவட்டத்தில் சுயேட்சை குழு உறுப்பினராக போட்டியிட்டவர் என்பதும், இவருக்கு 351 வாக்குகள் மட்டுமே கிடைத்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆகக் கூடுதலான விருப்பு வாக்குகளை பிரதமர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா கம்பஹா மாவட்டத்திலிருந்து போட்டியிட்டுப் பெற்றுக் கொண்டார் என்பது தெரிந்ததே.

# பேராசிரியர் பீரிஸுக்கு முக்கிய அமைச்சு பதவி

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக முன்பு பணியாற்றிய பேராசிரியர் ஜி எல் பீரிஸ், வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் அரசிலமை

அதிகாரப் பரவலாக்கம் செய்யப்பட வேண்டும் என்றும், மாவட்டங்களின் எல்லைகள் மறுசீரமைக்கப்பட வேண்டும் என்றும் இவர் கருத்துடையவர் ஆவார். தேர்தலுக்கு முன்

குறிப்பிடத்தக்கது.

ஐ. தே க வின் முன்னாள் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான பிரேமதாசாவின் நெருங்கிய சகாவாக இருந்த இவர் பிரேமதாசாவின்

# அனுரா வெளியேறியதால் சு.கட்சி புனரமைப்பு பெற்றது

-காமினி திசாநாயக்கா

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து அநுரா பண்டாரநாயக்கா வெளியேறியமையானது கட்சியைப் புனரமைப்புச் செய்தது போலாகி விட்டது என காமினி திசாநாயக்கா தெரிவித்தார்

அவர் மேலும் கூறுகையில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியிடம் ஒரு நம்பிக்கையைத் தோற்றுவித்தது எனவும் அவர் இணைந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி அதோகதிக்குள்ளாகியது எனவும் பின்னர் கட்சியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஒரு மோசமான நிலை ஏற்பட்டது என

சுமையுடன் பிரச்சினைகளுக்குள் அவர் நுழைகின்றார் என்றும் கூறலாம்.

225 ஆசனங்களைக் கொண்ட பாராளுமன்றத்தில், தற்பொழுது சந்திரிகா தரப்பில் 113 பேர் மட்டுமே உள்ளனர். தமிழர் விடுதலைக் கூட்டணியும், ஜனநாயக மக்கள் ஐக்கிய முன்னணியும் - டிளொட் - பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கு ஆதரவு அளிப்பதாக உறுதி அளித்திருப்பினும் அவை அரசாங்கத்தில் இணைந்துகொள்ள மறுத்துள்ளதாகவே முன்னர் வெளியாகிய தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில், ஒரு பாதுகாப்பான அறுதிப் பெரும்பான்மை பெற்ற நிலையில், புதிய அரசாங்கம் இருப்பதாகக் கொள்ளமுடியாது

இந்நிலையில், சிறுபான்மை பலத்துடன் ஐ.தே.க. ஆட்சியை நீடிக்க விரும்பிய காமினி திசாநாயக்கா போன்றவர்கள் எப்பொழுதும் தொல்லை கொடுக்கும் முயற்சியில் ஈடுபடலாம் இது முற்றுமுழுதாக வெற்றி அளிக்காது என்று கூறிவிடுவதற்கும் இல்லை. இதனை உறுதிப்படுத்துமாப் போலவே காமினி திசாநாயக்கா தெரிவிக்கும் கருத்துக்களும் உள்ளன.

அடுத்ததாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருக்கும் டி.பி. விஜேதுங்கா அரசாங்கத்தை அமைதியாகக் கைமாற்றி இருப்பினும் அவர் புதிய அரசாங்கத்திற்கு முட்டுக்கட்டைகள் போடாமல் நடந்து கொள்வார் என்றும் எதிர்பார்ப்பதற்கு இல்லை. இதற்கு பாதுகாப்பு அமைச்சுப்பதவியை ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா தொடர்ந்து வைத்துக் கொண்டுள்ளமையையே ஆதாரமாகச் சுட்டிக்காட்ட முடியும். இந்நிலையானது சந்திரிகா குமாரணதுங்கா தனது விருப்பத்திற்கேற்ப ஆட்சியை நடத்திச் செல்வதற்கு முட்டுக்கட்டை ஓரளவேனும் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இதேசமயம் சந்திரிகா குமாரணதுங்கா உள்நாட்டில் எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினைகள் நிறையவே உள்ளன. வேலைவாய்ப்பு, வறுமை என்ற பொதுப் பிரச்சினையுடன், இலங்கையின் இன்றைய அரசியல் தலைவிதியையே நிர்ணயித்துவரும் இனப் பிரச்சினை தொடர்பாகவும் முன்னேற்றகரமான முயற்சிகளைமேற்கொள்ளப்படவேண்டிய அவசியம் உள்ளது.

இனப்பிரச்சினை விவகாரம் பெரும் சிக்கல் நிறைந்த தொன்றாக இருப்பதோடு இலகுவில் தீர்த்துவிடக் கூடியதும் அல்ல. அத்தோடு இவ் விவகாரத்தில் ஜனாதிபதி டி.பி விஜேதுங்கா சந்திரிகாவின் போக்கிற்கு முரண்பட்ட போக்கைக் கொண்டுள்ளதோடு இதில் இராணுவத் தலைமையின் கருத்துக்களும் முக்கியமானவையாகும். இந்நிலையில் இதனை ஒரு முகப்படுத்தி பிரச்சினைக்கு தீர்வு காண்பதென்பது சிக்கலானதொன்றே.

இந்த வகையில் சந்திரிகா குமாரணதுங்கா பெரும் நெருக்கடியான காலகட்டத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளார் என்றே கொள்ள வேண்டும். இதுவரை ஒரு முறைதானும் எம். பி. பதவி கூட வகிக்காத சந்திரிகா குமாரண துங்கா இந்நெருக்கடிகளை எல்லாம் சமாளித்து அரசியலில் வெற்றி பெறுவாரே யானால், அது பெரும் வரலாற்றுச் சாதனையாகவே இருக்கும்.

# முக்கிய அமைச்சு பதவி

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக முன்பு பணியாற்றிய பேராசிரியர் ஜி எல் பீரிஸ், வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் அரசிலமைப்பு விவகாரங்களுக்கான அமைச்சராக நியமனம் பெற்றுள்ளார்.

அரசியலமைப்பு ரீதியாக மாற்றம் கொண்டுவரப்பட்டு அதிகாரப் பரவலாக்கம் செய்யப்பட வேண்டும் என்றும், மாவட்டங்களின் எல்லைகள் மறுசீரமைக்கப்பட வேண்டும் என்றும் இவர் கருத்துடையவர் ஆவார். தேர்தலுக்கு முன்பாகவே இனப்பிரச்சினைக்கான தீர்வு காண்பது தொடர்பாக ஆராய சுதந்திரக்கட்சி நியமித்த குழுவின் தலைவராகவும் இவர் செயற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஐ. தே க வின் முன்னாள் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான பிரேமதாசாவின் நெருங்கிய சகாவாக இருந்த இவர் பிரேமதாசாவின் மறைவின் பின்னர் சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கொண்டவர் என்பது தெரிந்ததே.

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து அநுரா பண்டாரநாயக்கா வெளியேறியமையானது கட்சியைப் புனரமைப்புச் செய்தது போலாகி விட்டது என காமினி திசாநாயக்கா தெரிவித்தார்

அவர் மேலும் கூறுகையில், அனுராவின் வெளியேற்றம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியிடம் ஒரு நம்பிக்கையைத் தோற்றுவித்தது எனவும் அவர் இணைந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி அதோகதிக்குள்ளாகியது எனவும் பின்னர் கட்சியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஒரு மோசமான நிலை ஏற்பட்டது எனவும் மேலும் தெரிவித்தார்

# சந்திரிகாவுக்கு முதன்மை கொடுத்து இந்திய பத்திரிகைகள் செய்தி

(புதுடில்லி)

சிறிலங்காவின் புதிய பிரதமராக திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கா பதவியேற்றிருப்பதை புதுடில்லியிலிருந்து வெளிவரும் பத்திரிகைகள் பலவும் முக்கியத்துவம் கொடுத்துள்ளன புதுடில்லியிலிருந்து வெளிவரும் பத்திரிகைகள் பலவும் திருமதி சந்திரிகாவின் வெற்றி குறித்து தலைப்புச் செய்திகளை வெளியிட்டு இருப்பதுடன், அவரது அரசியல் வாழ்க்கை மற்றும் பின்னணிகள் குறித்தும் முக்கியத்துவம் கொடுத்து செய்திகள் வெளியிட்டுள்ளன. 'ஏசியன் ஏஜ்' பத்திரிகை சிறிலங்காவின் இரண்டாவது பெண் பிரதமர் என மகுடமிட்டு செய்தி வெளியிட்டுள்ளது. இந்துஸ்தான் டைம்ஸ், நேஷனல் ஹெரல்ட் இந்து. பயனியர் போன்ற பத்திரிகைகளும் செய்தி வெளியிட்டுள்ளன.

# அளிக்கப்பட்ட பொறுப்பை நேர்மையுடன் செய்வேன்

\- சந்திரிகா

(கொழும்பு)

''என்னிடம் மக்களால் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களை நேர்மையுடனும் நேர்த்தியுடனும் செய்வேன்'' இவ்வாறு சிறிலங்காவின் புதிய பிரதமர் சந்திரிகா குமாரணத்துங்கா உறுதிபளித்துள்ளார்-

நேற்று இடம்பெற்ற பதவி ஏற்பு வைபவத்தைத்தொடர்ந்து கோட்டே ஸ்ரீநாக விகாரையில் நடைபெற்றமத வைபவத்தின் பின்னர் அங்கு கூடி நின்ற மக்கள் மத்தியில் உரையாற்றுகையில் இக்கருத்தைத் தெரிவித்துள்ளார்- அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மக்களின் எதிர்பார்ப்புகள் முழுமையாக நிறைவேற்றப்படும் என்றும் இது மக்களுக்குப் பயன்தரும் வகையில் அமையும்எனவும்தெரிவித்தார்

இனப்பிரச்சினை தீர்வு குறித்த

# சந்திரிகாவின் கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது

எந்தக் கட்சி ஆட்சியை அமைக்க முன்வந்த போதும் ஆட்சியை தொடர்ந்து நடத்துவதாயின் தமிழ், முஸ்லிம் கட்சிகளின் கணிசமான ஒத்துழைப்புடனேயே நடத்த முடியும் என 'யுக்திய' ஆசிரியர் சனந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தமிழ் - முஸ்லிம் பிரதிநிதிகளைத் திருப்தி செய்யும் வகையிலேயே எதிர்கால பாராளுமன்றம் செயற்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு-கிழக்கு பிரச்சினை அரசியல் ரீதியாக தீர்க்கப்பட வேண்டும் என்றும் தமிழ் பிரதேசங்கள் ஒன்றிணைக்கப்பட வேண்டும் எனவும் சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்ததை சிங்கள மக்கள் ஓரளவு ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்றும் இதற்கு காரணம் யுத்தம் தொடர்பாக சிங்கள மக்கள் வெறுப்பு அடைந்துள்ளதாகவும் தமக்கு தொடர்ந்து இழப்புகள் ஏற்பட்டதே காரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்,

# காமினி பொன்சேகாவிற்கு எம்,பி. பதவி இல்லை

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேசியப்பட்டியல் உறுப்பினராக இருந்த முன்னாள் பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகாவிற்கு அவ்வுறுப்பினர் நியமனம் ஏதும் வழங்கப்படவில்லை

ஐ தே க தேசியப்பட்டியல் உறுப்பினராக இருந்த சிறிசேனா கூரேக்கும் அந்நியமனம் வழங்கப்பட வில்லை

பாராளுமன்றத் தேர்தல்

# இரு வாக்குகள் மட்டும் ஒரு நிலையத்தில் பதிவு

(கொழும்பு)

சிறிலங்காவின் பத்தாவது பாராளுமன்றத்திற்குஒருவாக்களிப்பு நிலையத்தில் இரண்டு வாக்குகள் மட்டுமே அளிக்கப்பட்டுள்ளது.

சுமார் இரண்டு ஆயிரத்து அறுபது பேர் அவ்வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிக்கத் தகுதி பெற்றபோதும் இருபவரே வாக்களித்துள்ளனர்.

கொழும்பு கொட்டாஞ்சேனை விவேகானந்த பாடசாலையில் அமைக்கப்பட்ட யாழ்ப்பாண மாவட்ட வாக்களிப்பு நிலையத்தில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

# 200 யாருக்கு ஒருசோதனை சாவடி

(கொழும்பு)

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னரான வன்முறைகளை தடுக்க கொழும்பில் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவருகிறது-

200 யாருக்கு ஒரு சோதனை நிலைகள் அமைக்கப்பட்டு இராணுவமும் பொலிசாரும் சோதனைகளில் ஈடுபட்டு வருவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# தேர்த்திருவிழா

நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோவிலின்வருடாந்த உற்சவத்தில் இடம்பெறும் தேர்த்திருவிழா இன்றும்தீர்த்தத் திருவிழா நாளையும் நடைபெறவுள்ளது.

## புலிகளின் குரல்

## நிகழ்ச்சி நிரல்

**1994. 08. 20**

**சனி இரவு**

08. 01 - அறிவியற் கலசம்
08. 10 - நிகழ்வும்பகிர்வும்
08. 25 - நேயர் மடல்கள்
08. 30 - செய்திகள்
08 40 - சித்திரம் ''பசுமைகொண்ட தமிழீழம் படைத்திடுவோம்''

**1994. 08. 21**

**ஞாயிறு காலை**

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - களத்தில் மலர்ந்தவை
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

# எதிர்க்கட்சி தலைவர் பதவிக்கு போட்டியிட காமினி முடிவு

(கொழும்பு)

எதிர்க் கட்சி தலைவர் பதவிக்கு தானே போட்டியிடப்போவதாக காமினி திசாநாயக்கா நேற்று தெரிவித்துள்ளார்.

நேற்றுமாலை நடைபெற்ற உள்நாட்டு வெளிநாட்டு பத்திரிகையாளர் மகாநாட்டில் இக்கருத்தைத் அவர் தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில், இது ஐக்கிய தேசியக் கட்சியின் வேண்டுகோள் என்றும், எனவே இது குறித்து கட்சியினரிடையே இரகசிய வாக்கெடுப்பு எடுத்து பார்க்கட்டும் எனவும் சவால் விடுத்துள்ளார்.

இலங்கையில் அண்மைக் காலங்களில் அமைக்கப்பட்ட அமைச்சரவைகளிலே பூரண திருப்தி தரக்கூடிய அமைச்சரவை இது என்றும், எனவே இதற்கு உண்மையிலே தான் திருப்தி அடைவதாகவும் புகழாரம் சூட்டுவதாகவும் தெரிவித்தார்

## எறிகணை வீச்சு

(குருநகர்)

நேற்று முன்தினம் வியாழக்கிழமை பகல் 12-00 மணி தொடக்கம் 2-00 மணிவரை மண்டைதீவு சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து யாழ் கரையோரப் பகுதிகளை நோக்கி பத்திற்கும் மேற்பட்ட எறிகணைகள் ஏவப்பட்டன-

எறிகணைகள் கொட்டடி யாழ் கோட்டை பகுதிகளில் வீழ்ந்து வெடித்த சத்தங்கள் யாழ் நகரை அதிர வைத்தன-

அன்றைய தினம் இரவு 9-00 மணியளவில் மண்டைதீவு சிறிலங்கா காவலரண் பகுதியில்இருந்து கடலேரியை நோக்கி சரமாரியாக துப்பாக்கி வேட்டுகளும் நடத்தப்பட்டன- (21)

## விபத்தில் காயம்

மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கரவண்டியும் விபத்திற்குள்ளாகியதில் துவிச்சக்கர வண்டியில் சென்றவர் தலையில் காயமடைந்தார்.

குலசிங்கம்செவ்விழிவயது19 என்பவரே விபத்தில் காயமடைந்து யாழ்- போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவராவார்.

நேற்றுக் காங்கேசன்துறை வீதி இந்துக் கல்லூரி சந்தியில் மேற்படி விபத்து இடம்பெற்றது. (88)

## வயிற்றோட்டம் பரவுகிறது

திருநெல்வேலி கலாசாலை வீதிப் பகுதியில் வயிற்றோட்ட நோய் பரவி வருவதாக அறியப்படுகிறது. இப் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் உட்பட ஏழு பேர் நேற்றுக் காலை வயிற்றோட்ட நோயினால் யாழ். போதனா மருத்துவமனையில்அனுமதிக்கப்பட்டுள்ளனர்

யாழ். ஸ்ரீதர்
அகலத்திரையில்

## எதிர்க் கட்சித் தலைமைக்கு ஐ. தே. க.விற்குள் இழுபறி

எதிர்க் கட்சித் தலைவர் பதவிக்கு காமினி திசாநாயக்காவுக்கும், ரணில் விக்கிரமசிங்காவுக்கும் இடையே போட்டி நடைபெறுவதாக தெரியவந்துள்ளது.

இதனால் ஐ.தே.க. விற்குள் மீண்டும் ஒரு குழப்பம் ஏற்பட்டுள்ளது எனவும் ஒரு சில உறுப்பினர்கள் காமினி திசாநாயக்கா எதிர்க் கட்சித் தலைவராக வர வேண்டும் என விரும்புவதாகவும் இன்னும் ஒருசாரார் ரணில் விக்கிரமசிங்கா எதிர்க் கட்சித் தலைவர் பதவி வகிப்பதை விரும்புவதாகவும் அச் செய்தி மேலும் தெரிவிக்கின்றது.

## சிறிலங்காவுடன் உறவை வலுப்படுத்தவிரும்புகிறோம்

### புதிய பிரதமருக்கு இந்தியப்பிரதமர்

இந்திய சிறிலங்கா உறவுகளை வலுப்படுத்துவதில் பிரதமர் சந்திரிகாவுடன் ஒன்றுபட்டு பாடுபட தாம் விரும்புவதாக இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் பிரதமர் சந்திரிகாவுக்கு அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## பொதுஜன ஐக்கிய முன்னணியின் சகல கட்சித் தலைவருக்கும் அமைச்சர் பதவி

பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் சகல கட்சித் தலைவர்களுக்கும் அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டமை புதிய அமைச்சரவையின்குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாக உள்ளது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் லலித் குழுவின் தலைவி சிறிமானி அத்துலத்முதலிக்கும் கம்யூனிஸ் கட்சி தலைவர்களில் ஒருவரான இந்திக குணவர்த்தன, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப், சமசமாஜ கட்சித் தலைவர் பேனாட் சொய்சா ஆகியோருக்கும் அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### புதிய அமைச்சர்களாகப்

- ★ ரட்ணசிறி விக்கிரமநாயக்க - பொது நிர்வாக உள்ளூராட்சி, தோட்டத் தொழில்.
- ★ பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் - வெளிநாட்டு வர்த்தகம், நீதி, அரசியலமைப்பு விவகாரம்.
- ★ கிங்ஸ்லி விக்கிரமரட்ன-வர்த்தக, வாணிப, உணவு.
- ★ டி. எப். ஜயரட்ன - விவசாயம், காணி,வனவளம்.
- ★ ரிச்சர்ட் பத்திரன - கல்வி, உயர்கல்வி.
- ★ நிமல் சிறிபால டி சில்வா - வீடமைப்பு, நிர்மாண, பொது வசதிகள்.
- ★ மகிந்த ராஜபக்ஷ - தொழில், தொழில் பயிற்சி.
- ★ ஏ. எச். எம். பௌசி - சுகாதார, சமூகசேவைகள்,
- ★ சிறிமானி அத்துலத் முதலி - போக்குவரத்து நெடுஞ்சாலைகள் சுற்றாடல், மகளிர் விவகாரம்.

## வீரவணக்க கூட்டம்

கடற்புலிகளின் யாழ் மாவட்ட பிரதேசங்களில் ஆடி-ஆவணி மாதங்களில் நினைவு கூரப்படும் மாவீரர்களின் வீரவணக்க கூட்ட நிகழ்வுகளில் இன்றுவலிகாமம் வடக்கு-கிழக்கு பிரதேச மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் மாலை 7.30 மணிக்கு சுளிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது இந் நிகழ்வில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## ஊரடங்கு

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்குமெனவும், அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் இதேபோல் ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்படும் எனவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. மற்றைய இடங்களில் நேற்று மாலை 4-00 மணிக்கு ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டது.

## புலிகளே

படையினர் தவிர வேறு எவரும் ஆயுதங்களை வைத்திருக்க அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்-

எம்மை எதிர்நோக்கியுள்ள பெரும் அறைகூவல்களை நாம் உணர்ந்துள்ளோம் ஆனால் இவற்றை எதிர்நோக்கக்கூடிய வல்லமையும் துணிவும் உறுதியும் எம்மிடம் உண்டு- நாட்டில் உண்மையான ஜனநாயகத்தை தோற்றுவிப்பதே முதல் பணியாக இருக்கும்-

லஞ்ச ஊழல்கள் குறித்து விசாரிக்க விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்படும் எனவும் பிரதமர்சந்திரிகா மேலும் தெரிவித்தார்- எல்லா சிறுபான்மையின மக்களும் சம உரிமையுடன் வாழக்கூடிய வேற்றுமையற்ற சமுதாயத்தை கட்டி எழுப்புவதே எம் ஆத்மபூர்வமான நோக்கம் இது வடக்கு கிழக்கில் போர் நடக்கும்போது சுலபமாக செய்யக்கூடியதல்ல என்பதும் எமக்குத் தெரியும்- எனவே நாம் கவனமாக செயற்படவேண்டும்- ஆனால் பிரச்சினைக்கு தீர்வுகான நாம் விரைந்து செயற்படுவோம் என பிரதமர் சந்திரிகா நேற்று தனது முதல் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்து விடுதலைப்புலிகளின் லண்டன் கிளை செய்தியொன்றை தமக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும், இன்று தமிழ் மக்களின் பிரச்சினைக்கு விரைவான தீர்வு காண வேண்டிய நிலையில் தான் இருப்பதாகவும் சிறிலங்கா பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா மேலும் தெரிவித்துள்ளார்-

அவர் மேலும் கூறுகையில் வடக்கு கிழக்கில் நடைபெறும் யுத்தத்தை வியாபாரமாக பயன்படுத்திவரும் இவ் வேளையில் அதனை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்தி அங்குள்ள படையினரை கௌரவமாக மீண்டும் திரும்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

அரசாங்க அதிகாரிகள் மத்தியில் அரசியல் செல்வாக்கினால் கடும் சீரழிவுகள் காணப்படுகின்றன இவற்றை நீக்கி கௌரவமான முறையில் அவர்களின் கடமையைச் செய்ய வழிவகை செய்யவேண்டிய நிலை உள்ளது என்றார்

## முதலமைச்சர் நியமனம்

மேல் மாகாண முதலமைச்சராக மொல் ராஜபக்ஷ நேற்று பதவி ஏற்றார் இம் மாகாண சபையில், மீன்பிடியியல் துறை அமைச்சராக இருந்த இவர் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க தமது மேல்மாகாண முதலமைச்சர் பதவியை துறந்ததையடுத்து புதிய முதலமைச்சராக பதவி ஏற்கிறார்,

## சந்திரிகாவிடைய

என்பதையும், இவ் விடயத்தில் அவருக்கு இருக்கும் ஆர்வத்தை காட்டுவதாகவும் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதற்கு முந்திய ஐ. தே க. ஆட்சியில் இவரது சகோதரரான அநுரா பண்டாரநாயக்கா கட்சி மாறியதையடுத்து தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு உருவாக்கப்பட்டதும், அவ் அமைச்சிற்கு பொறுப்பாக அநுரா நியமிக்கப்பட்டிருந்ததும் தெரிந்ததே.

## பொ.ஐ.மு.

பண்டாரநாயக்கா அருகே இருந்த சுனேத்திர நாணயக்காரவை பிடித்தபடி எழுந்து நின்றார்- இவர் முன்வரிசையில் காணப்பட்டார். ஜனாதிபதி மண்டபத்தின் முன்பகுதிக்கு வந்து அனைவருக்கும்

டாரநாயக்காவினால் எழுந்து நிற்க முடியாத நிலையில் அவர் ஆசனத்தில் அமர்ந்து இருந்த நிலையிலேயே தனது பதவிப்பிரமாணத்தை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து பத்தாவது பாராளுமன்றத் திற்

# ஜனாதிபதித் தேர்தலில் சிறிமாவோ போட்டி?

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சிறிமாவோ பண்டாரநாயக்கா போட்டியிடலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. தற்போதைய அரசில் அவர் பொறுப்புகள் ஏதுமற்ற அமைச்சராக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற போதிலும் அத்தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர் வெற்றிபெறின் பின்னர் ஜனாதிபதி ஆட்சி முறை நீக்கப்படும் என இம் முன்னணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## புலிகளுடனான மோதலில் 2 இராணுவத்தினர் பலி

(கொழும்பு)

கடந்த ஞாயிறு காலை ஹபரண காட்டுப்பகுதியில் இரண்டு இராணுவத்தினர் புலிகளால் கொல்லப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பொலநறுவை வகந்தவாய்வீதியில் ரோந்து சென்ற படையினரே புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானவர்களாவார்.

## மரண அறிவித்தல்கள்

### திரு. கார்த்திகேசு சிவபாதசுந்தரம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு 11ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும், கிளி-வட்டக்கச்சியில் வசித்தவருமான திரு. கார்த்திகேசு சிவபாதசுந்தரம் 18-08-94 இல் காலமானார். இவர் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-இலட்சுமி தம்பதியின் அன்பு மகனும், வல்லிபுரம்-சின்னத்தங்கம் தம்பதியின் அன்பு மருமகனும், வாலாம்பிகையின் அன்புக் கணவரும், கண்ணன், ஜசிந்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கனகசுந்தரம், பாலசுந்தரம், சௌந்தரராஜா (ஜேர்மனி), சிவயோகசுந்தரம் (ஜேர்மனி), தவராஜசுந்தரம் (காந்தன் - புங்-நபி ப. நோ. கூ. சங்கம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் வட்டக்கச்சியில் நடைபெறும்.

தகவல்: காந்தன்
(சகோதரன்)

(9152) (ஈழநாதம் புங்குடுதீவு நிருபர்)

### செல்லையா சுப்பிரமணியம்

சங்கத்தானையை பிறப்பிடமாகக் கொண்டவரும் கொக்குவிலை வதிவிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற செல்லையா தங்கம்மாவின் மகனுமாகிய செல்லையா சுப்பிரமணியம் 19-08-94 இல் காலமானார்.

அன்னார் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், மணிவண்ணன் (நோர்வே), யாழினி, புகழினி ஆகியோரின் அன்புத்தந்தையும், திருமதி சு. பரமேஸ்வரி, திரு- வைத்திலிங்கம், திருமதி து. சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 20-08-94 மு.ப. 10 00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளிற்காக கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

அகலத்திரையில்

அனேக ரசிகர்களின்
வேண்டுகோளுக்கிணங்க

தினசரி காலை 10-30
மணிக்கு மட்டும்

" மண்ணுக்காக "

தினசரி மாலை 4-00 மணி
6-00 மணி காட்சிகளாக

CHUCK NORRIS
நடித்த
BRAD-
DOCK

MISSING IN
ACTION - III
(தாக்குதல் சித்திரம்)

ஒவ்வொரு சனி, ஞாயிறு
தினங்களில்
பி. ப. 2-00 மணிக்கு மட்டும்

''ஒளி வீச்சு''
யூன் - 94
காண்பிக்கப்படும்.
(சி-10131)

★ மங்கள சமரவீர - தபால், தொலைத் தொடர்பு
★ இந்திக குணவர்தன - கடற்றொழில், நீரியல் வளம்.
★ எம். எச். எம். அஷ்ரப் - கப்பல் போக்குவரத்து துறை முகங்கள், புனர்வாழ்வு புனர்நிர்மாணங்கள்.
★ டி. எம். எஸ். பி. திஸ்ஸநாயக்க - இளைஞர் விவகார விளையாட்டுத்துறை கிராமிய அபிவிருத்தி.
★ லக்ஷ்மன் ஜெயகொடி - கலாசாரம், சமயம்.
★ லக்ஷ்மன் கதிர்காமர் - வெளிவிவகாரம்.
★ பெர்னாட் சொய்சா - விஞ்ஞான, தொழில்நுட்ப, மனித வளம்.
★ அமரசிறி தொடங்கொட - உள்நாட்டு அலுவல்கள், மாகாணசபை. கூட்டுறவு.

## புதிய

பிரதமர் சந்திரிகாவின் சமாதான அழைப்பை வரவேற்கின்றது. ஆயினும் பிரதமரின் பேச்சுவார்த்தைக்கான முயற்சியில் சில முட்டுக்கட்டைகளும் உண்டு. முதலாவது தற்போது பதவி ஏற்றுள்ள அரசு தனித்து செயலாற்றும் திறன் அற்றது. மேலும் பிரதமரும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியும் இப்போது வெவ்வேறு கட்சியினர். மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகளால் தமது நலன் கருதி வளர்க்கப்பட்ட இனவாதம் எப்படி சமாதான முயற்சிக்கு இடமளிக்கும் என்ற நியாயமான சந்தேகமும் எழுகிறது.

சமஷ்டி முறையிலான தீர்வை அரசு முன்வைத்தால் அதுபற்றி பரிசீலனை செய்ய தயாராக இருக்கிறோம் என விடுதலைப் புலிகள் ஏற்கனவே அறிவித்துள்ளனர். ஆனால் சிங்கள தலைவர்களோ ஒற்றையாட்சி அமைப்பினுள்ளேயே இனப்பிரச்சினையை தீர்க்கப் பார்க்கின்றனர். இவற்றை நான் சில கருத்துகளாக கூறுகிறேனே யொழிய பேச்சுவார்த்தைக்கு தடையாக குறிப்பிடவில்லை. விடுதலைப் புலிகள் சமாதானத்திற்கான கதவுகளை திறந்தே வைத்துள்ளனர்.

இதேசமயம்வடக்கு-கிழக்கு இணைப்பு குறித்து சந்திரிகா குமாரணதுங்க எதுவும் தெளிவாக குறிப்பிடவில்லை. வடக்கு-கிழக்கு இணைந்த அடிப்படையிலான தீர்வே முன்வைக்கப்பட வேண்டும்.

திக்கு வந்து அனைவருக்கும் கைகூப்பி வணக்கம் செலுத்திய பின்னர் தனது தலைமை ஆசனத்தில் அமர்ந்துகொண்டார்-

கடிகாரத்தில் நேரம் சரியாக 10-14 காட்டியபோது சந்திரிகா குமாரணதுங்க எழுந்து சென்று தனது பிரதமர் பதவிக்கான பத்திரத்தை ஜனாதிபதியிடம் இருந்து பெற்றுக்கொண்டார். சந்திரிகா எழுந்து சத்தியப் பிரமாணம், இரகசிய காப்புப் பிரமாணம் செய்த பின்னர் 10-17 மணிக்கு பதவியேற்பு பத்திரத்தில் கையெழுத்திட்டார்-

தனக்கு உரிய அமைச்சர் பத்திரத்தை ஜனாதிபதியிடம் இருந்து பெற்றுக்கொண்ட பின்னர் ஜனாதிபதிக்கு வணக்கம் தெரிவித்தார்- சபையில் இருந்த தாயாருக்கு வணக்கம் செலுத்தி, சபைக்கும் வணக்கம் செலுத்திவிட்டு ஜனாதிபதி மேசையில் ஜனாதிபதிக்கு இடது புறமாக அவருக்கு என ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் அமர்ந்துகொண்டார்-

ஏனைய அமைச்சர்களில் முதலாவதாக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பதவிப்பிரமாணம் செய்து கொண்டார் சிறிமாவோபண்தாவது பாராளுமன்றத் திற்கான ஏனைய அமைச்சர்கள் பத்தொன்பது பேரும் ஒன்றாக எழுந்துநின்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர் இதனை அடுத்து ஒருவர் பின் ஒருவராக தமது அமைச்சிற்கான நியமனப் பத்திரத்தை ஜனாதிபதியிடமிருந்து பெற்றுக் கொண்டனர்.

லக்ஷ்மன் ஜெயக்கொடி பேனாட் சொய்சா, டி. எம். ஜெயரட்ண ஆகியோரைத் தொடர்ந்து ஏனையோரும் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர் ஜெயரட்ண ஜனாதிபதியிடம் நகைச்சுவையோடு ஏதோ ஒன்றைப்பற்றி கூறவும் மண்டபம் பூராவும் சிரிப்பொலி எழுந்தது.

பிரதமர், அமைச்சர் மற்றும் அமைச்சர்கள் பதவிப் பிரமாணம் செய்யும் வைபவம் 10 52க்கு முடிவடைந்தது.

பதவியேற்பு வைபவம் முடிவடைந்ததைத் தொடர்ந்து ஜனாதிபதி புதிய அமைச்சரவை அங்கத்தவர்களுடன் சேர்ந்து புகைப்படம் எடுத்துக் கொண்டார் இறுதியாக ஜனாதிபதியால் சிறிய விருந்துபசாரம் ஒன்றும் வழங்கப் பட்டதுடன் நிகழ்ச்சிகள் முடிவடைந்தன.

...த்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நந்தாவில் ஒழுங்கை, தகவல்:
கொக்குவில் கிழக்கு. ச. நாகேஸ்வரி
(9156) (மனைவி)

## நடராசா யோகராசா
### (ராசன்) (அமீன்)

மாம்பிராய் வீதி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் 306/2, நாவலர் வீதி, ஆனைப்பந்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா யோகராசா நேற்றுக் காலமானார்.

இவர் நடராசா—நாகமுத்துவின் அன்பு மகனும், பாலசுப்பிரமணியம், செல்வராசா. சிவராசா, விஜயகுமார், சரோஜினிதேவி, வள்ளிநாயகி, நாகதேவி ஆகியோரின் அன்பு சகோதரனும், யேசுதாசன், அமிர்தராசா, தம்பிராசா, சிவபாக்கியம், புஸ்பராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு(20-8-94)இன்று காலை 10 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி. கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
நா. நடராசா
306/2, நாவலர் வீதி, (தகப்பன்)
யாழ்ப்பாணம். (9157)

நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலய இரதோற்சவம் சிறப்புற எங்கள் வாழ்த்துக்கள்

# வேல்முருகன் விற்பனவு நிலையம்

539, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (சி-10154)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ஆம்இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது